பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 28 வியாழக்கிழமை 12.08.2021 கதிர் 280


இனி இது இரகசியம் அல்ல!

பொருளாதார நெருக்கடியை முன்னிறுத்தி, அதனால் தடுமாறும் அரசு, அக்காரணத்தினால் கொரோனாக் கட்டுப்பாட்டில் தீர்க்கமான - இறுக்கமான - முடிவை எடுக்க முடியாமல் தடுமாறுகின்றது.

பின்னடைவும்

பக்கம்02

## ஒரே நாளில் 124 பேர் உயிரிழப்பு மூன்று நாள்களில் 353 பேர் சாவு

### நாள்தோறும் எகிறும் கொரோனா மரணம்

இலங்கையில் மேலும் 124 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். நாட்டில் இதுவரை இதுவே நாளொன்றில் அதிகபடியான கொரோனா சாவு எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கடந்த மூன்று நாள்களில்

2

## 2,890 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்!

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 890 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் கூறினார்.

அதன்படி, நாட்டில் மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 41 ஆயிரத்து 982 ஆக அதிகரித்துள்ளது என்று

2

# சர்வதேசப் பிடியிலிருந்து தப்ப முயலும் அரசின் உபாயங்களுக்கு இடமளியோம்

## கூட்டமைப்பின் பங்காளி ரெலோ திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 12

சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தமிழர் தரப்புடன் பேச்சு என்ற அரசின் தந்திரோபாய நடவடிக்கைக்கு தமிழ் மக்களைப் பலியாக்க நாங்கள் ஒருபோதும் அனுமதியோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ தெரிவித்துள்ளது.

2



## யாழில் நேற்றும் நால்வர் மரணம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 4 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர் என்று போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த 68 வயதுடைய ஆண் ஒருவரும், சுன்னாகம் ஊரெழுவைச் சேர்ந்த 56 வயதுடைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக

2

## உடனடி ஊரடங்கு ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும்

### சமூக மருத்துவப் பேராசிரியர் எடுத்துரைப்பு

நாட்டில் உடனடியாக ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டால் 20 நாள்களுக்குள் குறைந்தது 1,200 இறப்புகளைத் தடுக்க முடியும் என்று சமூக மருத்துவப் பேராசிரியர் சுனேத் அகம்பொடி தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், முடிவெடுப்பதில் 5 நாள்கள் தாமதமானலும் அது 700 பேரின் விருப்பமில்லாத மனிதக் கொலை என்று குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் அகம்பொடி கொரோனா அதிகரிப்பு வரைபடங்களை பதிவிட்டு இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

## கிழக்கில் கொரோனா தாண்டவம்; ஒரே நாளில் 685 பேருக்கு தொற்று



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் இது வரை காலமும் கண்டிராத கொரோனாத் தொற்றுக்களின் பதிவு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஒரேநாளில் உச்சம்தொட்ட 685 தொற்றுக்கள் அன்றைய தினம் ஏற்பட்டுள்ளன. இது பேராபத்துக்கான சமிக்ஞையாகக் கூட எடுக்கலாம் என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர். எம்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் அம்பாறை சுகாதாரப் பிரிவில் 227 தொற்றாளர்களும், கல்முனை சுகாதாரப் பிராந்தியத்தில் 105 தொற்றாளர்களும், திருகோணமலை மாவட்டத்தில் 163 தொற்றாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 190 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில்

2

## வவுனியாவில் கிணற்றிலிருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டம், ஆச்சிபுரம் பகுதியில் கிணற்றில் இருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை நேற்றுக் காலை முதல் வீட்டில் காணாத நிலையில், உறவினர்கள் அவரைத் தேடியுள்ளனர்.

இதன்போது அருகில் உள்ள கிணற்றில் இருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த மோகன் திலக்சனா (வயது19) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொடிகாமம் விபத்தில் உயிரிழந்த பெண்ணுக்கும் கொரோனா உறுதி

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., தென்மராட்சி, கொடிகாமத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் உயிரிழந்த நிலையில் அவருக்குக் கொரோனா நோய்த் தொற்று உள்ளது என மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீடு நோக்கி நடந்து சென்ற குறித்த பெண்ணை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்தில்

2

## பிறந்த ஆண் குழந்தை கொரோனாவால் சாவு

மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள காட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த தம்பதிக்கு பிறந்த சிசு, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்துள்ளது.

பிரசவத்துக்காக

2

## ஊழியர்களுக்குக் கொரோனா மதுபானசாலைகளுக்குச் 'சீல்'

பருத்தித்துறையில் இரு மதுபானசாலைகள் சுகாதாரப் பிரிவினரால் 'சீல்' வைத்து எதிர்வரும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளானதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிராமக்கோட்டு சந்தியில் அமைந்திருந்த மதுபானசாலையும், ஆனைவிழுந்தான் - புனிதநகர் பகுதியில் அமைந்திருந்த மதுபானசாலையுமே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

குறித்த மதுபானசாலையில் பணியாற்றியவர்களும் தற்போது கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரழிவும் வரவரத் தீவிரமடைந்து வருவதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சமும் பீதியும், எழுந்துள்ளன. அரசின் மெத்தனப் போக்குக் குறித்து சீற்றமும் கிளம்பியுள்ளது.

மருத்துவ – சுகாதாரத் துறையினர் சொல்லிச் சொல்லிப் பார்த்தார்கள். கெஞ்சிக் கேட்டுப் பார்த்தார்கள். அரசு மசிவதாக இல்லை.

கொரோனா வைரஸ் – அதுவும் வீரியமும் வேகமும், அழிவு நாசமும் அதிகம் கொண்ட அதன் டெல்டா ரகத் திரிவு – எப்படிப் பரவினாலும் நாட்டை முடக்குவதோ, கட்டுப்படுத்துவதோ இல்லை என்பதில் விடாப்பிடி உறுதியுடன் – ஒரே பிடிவாதத்துடன் – நிற்கின்றது அரசு.

ஆட்சியாளர்கள் – அரசுப் பிரமுகர்கள் – பாதுகாப்பாக, முன்னேற்பாடுகளுடன் இருக்கின்றார்கள். அகப்பட்டவர்கள் பொதுமக்கள். குறிப்பாக மருத்துவ – சுகாதாரத் துறையினர்.

நாட்டை முடக்க மறுத்து, மெத்தனத்துடன் செயற்படும் அரசினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் தாங்கள் என்று சீறுகின்றார்கள் மருத்துவ சுகாதாரத் துறையினர்.

அரசின் இந்தப் பொறுப்பற்ற போக்குக்கு எதிராகத் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அரச தாதியர் அலுவலர் சங்கம் அறிவித்திருக்கின்றது.

இதுவரை ஆயிரம் தாதியர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். மருத்துவத் துறையில் ஐயாயிரம் பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு டாக்டர் உட்பட மூன்று மருத்துவ ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர்.

கண்டி தேசிய ஆஸ்பத்திரியில் 25 தாதியரும், மாத்தறை ஆஸ்பத்திரியில் எட்டுத் தாதியரும், கரவன்னெல ஆஸ்பத்திரியில் 12 தாதியரும், அநுராதபுரத்தில் 11 தாதியரும் கடந்த சில தினங்களில் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விஞ்ஞான பூர்வமாக திட்டமிட்ட முறையில் பகுதி நேர முடக்கத்தைக் கொண்டு வந்த மாதிரி இலங்கையிலும் உடனடியாக செயல்திறன் உள்ள முடக்கத்தைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிப்போம். அதனால் மருத்துவ சேவையே முற்றாக முடங்கும் என்று எச்சரித்திருக்கின்றது தாதியர் சங்கம்.

நீதி, நியாயத்தைச் சொல்லியும் கேட்காமல் அரசு அற்பத்தனமாக அடம்பிடித்தால் இப்படித்தான் அதனைக் கையாள வேண்டியிருக்கின்றது.

மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது. பிடுங்கித்தான் எடுக்க வேண்டும் போல...!

தாதியர் தொழில்சங்கப் போராட்டத்தால் சுகாதார சேவை பாதிக்கப்படும் என்பது உண்மை. ஆனால் நாட்டின் சுகாதார நிலைமை மோசமடையாமல் காப்பாற்றுவதற்கு அப்படித்தான் செய்ய வேண்டும் போல... வேறு என்ன வழி...?

– மின்னல் –

## பிறந்த ஆண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்பெண், டிக்கோயா – கிளங்கன் மகப்பேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதன்பின்னர், அப்பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதியானது.

பெண்ணின் கணவனுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இவ்விருவரும் ஒரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், அப்பெண், ஆண் சிசுவொன்றைப் பிரசவித்துள்ளார். அச்சிசு இறந்துவிட்டது. சிசுவுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என சுகாதார அதிகாரி நரேந்திர குமார் தெரிவித்தார்.

## கொடிகாமம் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகாயமடைந்த வயோதிபப் பெண் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் இரவே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த பூபாலசிங்கம் தனலட்சுமி (வயது – 65) என்ற 4 பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின்தகனம் செய்யப்படவுள்ளது.

## கிழக்கில் கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை 24 ஆயிரத்து 455 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை, 424 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

அம்பாறை பிராந்தியத்தில் 03 டெல்டா நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது சிகிச்சையில் நலமாகவே உள்ளனர் .

கிழக்கு மாகாணத்துக்கெனக் கிடைக்கப்பெற்ற 9 இலட்சம் தடுப்பூசிகளில் இதுவரை 8 இலட்சத்து 18 ஆயிரத்து 827 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுவிட்டன. அதாவது 80 வீதமானோருக்கு முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுவிட்டது.

கடந்த சில நாள்களாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் சடுதியாக அதிகரித்துள்ள கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களின் அதிகரிப்பு கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்டு வருவதைக் காணக் கூடியதாயுள்ளது.

கடந்த வாரங்களில் கிழக்கில் 200 – 250 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன் 2– 3 மரணங்களும் ஏற்பட்டிருந்தன. ஆனால், தற்போது அத்தொகை மும்மடங்காக மாறி வருகின்றது. இது கிழக்கு மாகாணத்துக்கு அபாய அறிவிப்பாகக் கருத முடியும்.

இதனைக் கருத்தில்கொண்டு மக்கள் அவதானத்துடன் சுகாதார வழிமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். சமூக இடைவெளிகளைப் பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் போன்ற விதிகளைப் பின்பற்றி மக்கள் நடந்து கொள்ள வேண்டும்.

மக்கள் பலர் தடுப்பூசியைப் பெற்றுவிட்டோம் என்ற நினைப்பில் சுகாதார நடைமுறைகளில் ஒருவித தளர்வைக் கடைப்பிடிப்பதாகவே பார்க்கின்றோம். எனவே, தயவுசெய்து அனைவரும் தொடர்ச்சியா கச் சுகாதார நடைமுறைகளை இறுக்கமா கக் கடைப்பிடிக்க வேண்டும் – என்றார்.

## ஒரே நாளில் 124...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(08,09,10) மாத்திரம் 353 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா காவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 464 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 124 பேரில் 49 பெண்களும், 75 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஒருவர் 30 வயதுக்குக் குறைந்த பெண் ஆவார். அத்துடன், 19 பெண்கள், 9 ஆண்கள் என 28 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 95 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில், 55 பெண்களும், 40 ஆண்களும் அடங்குகின்றனர்.

## சர்வதேசப் பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

சர்வதேச மட்டத்தில் அரசு பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. புரட்டாதி மாத அமர்வில் 46/1 ஜெனிவாத் தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்பட்டு கடுமையான அழுத்தங்களை அரசு எதிர்கொள்ள இருக்கின்றது.

ஜெனிவாத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கவில்லை. முற்றாக நிராகரித்திருந்தது. இதனாலே ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வெளியிலே சர்வதேச நாடுகள் அரசுக்குப் பல்வேறு விதமான அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்திருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மறுபரிசீலனை செய்ய முற்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மறுபக்கம் நிறைவேற்றப்படக் காத்திருக்கின்றது. இது வெறும் ஆரம்பமே.

இந்த அழுத்தங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு இலங்கை அரசு பல்வேறுபட்ட தந்திரோபாயங்களை ஆலோசித்து வருகின்றது. ஐ.நாவுடன் சேர்ந்து செயற்படுவதற்கு தாங்கள் தயார் என்று ஜனாதிபதி அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டம் அரச துஷ்பிரயோகத்துக்கே உதவுகின்றது எனச் சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவிக்கின்றன. அதை நீக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் எழுந்த வண்ணம் உள்ளன. அதைச் சமாளிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு குழு ஒன்று அமைத்து ஆராய்வதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே தமிழரின் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துவோம் என்று அவரால் கூற முடியவில்லை. அல்லது எதிர்காலத்தில் தமிழர் நிலங்களை கையகப்படுத்தமாட்டோம் என அறிவிக்க முடியவில்லை. ஏனெனில் தமிழ் மக்களுக்கு எதிரான சகலவிதமான திட்டங்களும் நடைபெறவே போகின்றன.

இப்படியான அரசியல் சூழலில் தமிழர் தரப்புடன் பேச்சுகளை முன்னெடுக்க அரசு தயாராக இருக்கின்றது என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. எதைப்பற்றி அரசு பேச்சு நடத்தப் போகின்றது என்ற தெளிவான கருத்துக்கள் வெளியிடப்படவில்லை. சர்வதேச மட்டத்தில் அரசுக்கு எதிராக உருவாகிவரும் பெரும் நெருக்கடிகளில் இருந்து தற்காலிகமாகவேனும் தன்னை விடுவித்துக் கொள்ள அரசு பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொள்ள முயற்சிக்கின்றது. அதன் ஒரு வடிவமாகவே இதை நாங்கள் பார்க்கின்றோம். ஒருபோதும் அரசினுடைய இந்த முயற்சிக்கு நாம் துணைபோக மாட்டோம். எம் மக்களைப் பலிக்கடா ஆக்கி சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளும் அரச முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

ஆகக் குறைந்த பட்சம் அரசமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நிறைவேற்றி மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை நிரந்தரமாக்குவதன் மூலமே ஆக்கபூர்வமான பேச்சுக்கு வழிகோல முடியும் என்று ரெலோ கருதுகின்றது. நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையிலும் அரசமைப்பில் ஏற்படுத்தக் கூடிய சிறிய திருத்தங்களின் மூலமும் இதை அரசு நிறைவேற்ற முடியும். அதற் கான சகல தகுதிகளுடனும் பலத்துடனும் இன்று அரசு இருக்கின்றது. சாதாரண பெரும்பான்மையே போதுமானது. இதற்கு இதயசுத்தியுடன் அரசு செயற்பட வேண்டியதே தேவையானது.

இந்தச் செயற்பாடு நல்லெண்ண நடவடிக்கையாக அரசு மேற்கொள்ளுமானால் பேச்சுக்கான சாதகமான சூழ்நிலையை அது ஏற்படுத்தும். இது புதிய விடயமே அல்ல. ஏற்கனவே அரசமைப்பில் இருக்கக்கூடிய எமது உரிமையைத்தான் நிறைவேற்ற நாங்கள் கோருகின்றோம்.

துறைமுக நகர ஆணைக்குழுவுக்குப் புதிய சட்டமூலத்தை நிறைவேற்றி அதிகாரங்களைச் சீனாவுக்குக் கையளித்த அரசால் ஏற்கனவே அரசமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண அதிகாரங்களை நிரந்தரமாக்க முடியும். நடைமுறைப்படுத்துவதில் சிரமம் இல்லை. தயக்கம் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமில்லை.

இதற்கு மேலாக அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகங்களின் செயற்பாடு, காணி அபகரிப்பு, தமிழர் தாயக நிர்வாகங்களில் சிங்கள நிர்வாகிகளின் நியமனம் என பல விடயங்களை அரசு செயற்படுத்திக் கொண்டு பேச்சுக்கு முயற்சி செய்கின்றோம் என்பதில் என்ன அரசியல் நியாயம் இருக்கின்றது?

பேச்சுக்கான இணக்கமான சூழ்நிலை ஒன்றுக்கு அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் கூட அரசியல் தீர்வு சம்பந்தமாக சர்வகட்சி கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு 18 சுற்றுப் பேச்சுகள் நடந்தும் எந்த ஆக்கபூர்வமான முடிவும் எட்டப்படவில்லை. அதேபோன்று 13ஆவது திருத்தத்தை முற்றுமுழுதாக நிறைவேற்றி மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை நிரந்தரமாக்க தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தரப்பிலிருந்து என்னென்ன அரசியல் சாசன சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அதற்காக தற்போதைய வெளிவிவகார அமைச்சராக இருக்கும் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. ஆனால், அந்தக் குழுவினாலும் எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இப்படியான பல அனுபவங்களை நாம் கடந்து வந்த பின்னரும் பேச்சுக்கு அழைத்தவுடன் கூட்டமைப்பு ஓடி வந்துவிடும் என்று அரசோ அல்லது வேறு தரப்புக்களோ கருதுவது வேடிக்கையானது.

பேச்சு அவசியமானது. நாம் அதற்கு எதிரானவர்கள் அல்லர். அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தி சாதகமான சூழலை ஏற்படுத்துவது அரசின் கடமை.

பேச்சுக்கான ஆக்கபூர்வமான செயல்பாடுகளை விடுத்து சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தமிழர் தரப்புடன் பேச்சு என்ற அரசின் தந்திரோபாய நடவடிக்கைக்கு தமிழ் மக்களை பலியாக்க நாங்கள் ஒருபோதும் அனுமதியோம் – என்றுள்ளது.

## 2, 890 தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 406 ஆக உயர்வடைந்துள்ளது.

## யாழில் நேற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழியர் ஒருவரும், கொடிகாமத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவரும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 76 வயதுடைய நகர சபைத் தலைவர் என நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 156ஆக உயர்வடைந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# பொய்க் குற்றச்சாட்டில் தொழிற்சங்க தலைவர்கைது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு அவசர தந்தி

## எதிர்ப்பு நடவடிக்கைக்குத் தயாராகின்றது இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம்

கல்வி இராணுவ மயமாக்கலுக்கு எதிராக குரல் எழுப்பிய தொழிற்சங்கத் தலைவரை பொய்யான குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாட்டின் மிகப் பழைமையான தொழிற்சங்கம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு தந்தி அனுப்பி எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இலவச கல்வி மற்றும் ஆசிரியர்கள், அதிபர்களின் உரிமைகளை பாதுகாக்கும் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வரும், இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் சதுர சமரசிங்கவை கைது செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு எதிர்ப்பு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு தந்தி அனுப்பி எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் ரொபர்ட் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஓகஸ்ட் 11ஆம் திகதி தந்தி அனுப்பி எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதோடு, நாடளாவிய ரீதியில் உள்ள தோட்டங்களில் உள்ள சங்கத்தின் உறுப்பினர்களால் அமைச்சருக்கு தந்தி அனுப்பி, சங்கத்தின் தலைவர் சத்துர சமரசிங்கவை பொய் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யும் முயற்சியை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காவல்துறையின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான முதல் தொழிற்சங்க நடவடிக்கை இதுவெனவும், அந்த குரலுக்கு செவிசாய்க்காமல் தொழிற்சங்கத் தலைவரை பொலிஸார் தொடர்ந்து பின் தொடர்ந்தால், மிகவும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க தமது சங்கம் அணி திரளும் என இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் ரொபர்ட் பிரான்ஸிஸ் எச்சரித்துள்ளார்.

## சீன தடுப்பூசி செலுத்திக் கொண்ட இலங்கையர்கள் பிரான்ஸ்வர தடை!

சீனாவின் சினோஃபார்ம் தடுப்பூசி பெற்ற இலங்கையர்களுக்கு பிரான்ஸ் வர தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2021 ஜூலை 31ம் திகதி முதல் அமுலாகியுள்ள நடைமுறையின்படி, சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோஃபார்ம் தடுப்பூசி பெற்ற இலங்கையர்கள் நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஃபைசர், மாடர்னா, அஸ்ட்ராஜெனேகா, கோவ்ஷீல்ட் மற்றும் ஜான்சன் அண்ட் ஜான்சன் ஆகிய தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்கள் மாத்திரம் பிரான்ஸுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என்று கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த பட்டியலில் சீனாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி- ஃபைசர் - இரண்டு அளவுகளையும் செலுத்திக்கொண்டு 2 வாரங்களுக்குப் பின்னர்

மாடர்னா-இரண்டு அளவுகளையும் செலுத்திக்கொண்டு 2 வாரங்களுக்குப் பின்னர் அஸ்ட்ராஜெனெகா மற்றும் கோவ் ஷீல்ட்-இரண்டு அளவுகளையும் செலுத்திக்கொண்டு 2 வாரங்களுக்குப் பின்னர் ஜான்சன் அண்ட ஜான்சன் -முதல் அளவு செலுத்திக்கொண்ட 4 வாரங்களுக்குப் பின்னர் பிரான்ஸுற்குள் பிரவேசிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி வைத்தியசாலையில் ஏ.பி., பி குருதி வகை பற்றாக்குறை காணப்படுவதாகவும், கொவிட் தடுப்பூசி நாடளாவிய ரீதியில் செலுத்தப்படுவதால் குருதி தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை குருதிப்பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் குருதி கொடையாளர்கள் தாமாக முன்வந்து குருதி கொடை வழங்கி வருகின்றனர்.

எனினும் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் குருதி தேவை ஏற்படும் சூழல் நிலவும் சந்தர்ப்பங்களில் நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குருதி பற்றாக் குறையைத் தீர்க்க கொடையாளர்கள் முன்வரவேண்டும் என கிளிநொச்சி வைத்தியசாலையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடையாளர் ஒருவர் முன்வரும் போது, அவர் கொவிட் தொற்றுக்குள்ளானவர் எனின் குணமடைந்த பின்னர் எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை திகதியிலிருந்து ஒரு மாதம் கடந்தவராகவும், தடுப்பூசி பெற்றிருப்பின் ஒரு வாரம் கடந்தவராகவும் இருக்க வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவற்றையும் கருத்தில் கொண்டு இரத்த வங்கிக்குக் குருதி கொடைகளை வழங்க முன்வர வேண்டும் என வைத்தியசாலையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## இலங்கையில் இருந்து நாடு கடத்தப்படவுள்ள வெளிநாட்டவர்

இலங்கையில் இருந்து ரஷ்ய நாட்டவர் ஒருவரை நாடு கடத்துமாறு காலி பதில் நீதிவான் பவித்ரா சன்ஜீவனி பத்திரன தெரிவித்துள்ளார்.

செல்லுப்படியாகும் வீசா இன்றி தங்கியிருந்த ரஷ்ய நாட்டவர் ஒருவரே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளார். அது வரை அவரை மிரிஹான இடைநிலை முகாமில் தடுத்து வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

எலெக்சேன்டர் செவென் கொவ் என்ற ரஷ்ய நாட்டவரே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளார்.

இந்த ரஷ்ய நாட்டவர் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்கு வருகைதந்து புஸ்ஸ கெதல பிரதேசத்தில் வீடு ஒன்றை வாடகை பெற்று தங்கியுள்ளார்.

எனினும் கடந்த மாதங்களாக வீட்டுக்கு வாடகை செலுத்தாமையால் வீட்டின் உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவரது வீசா 2015ஆம் ஆண்டே காலவதியானமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இலங்கையில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த குற்றசாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## நிபந்தனைகள் ஏதுமின்றி அரசியல் கைதிகளை விடுவிக்கப்பட வேண்டும் என்கின்றார் சக்திவேல்

அரசியல் கைதிகளுடைய விடயத்தில் தெற்கில் செயற்படுகின்ற நீதி மன்றங்கள் ஒரு விதமாகவும், வடக்கு கிழக்கில் செயற்படுகின்ற நீதிமன்றங்கள் இன்னொரு விதமாகவும் செயற்படுகின்றமை தொடர்பாக ஐ.நா. போன்ற அமைப்புகளுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்கான ஓர் அழுத்தக் குழுவாகவே நாம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தோம்.

அதற்கேற்ப மக்கள் எழுச்சியோடு போராட்டம் நடத்துகின்றமை, அதே போன்று ஐக்கிய நாடுகள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு இந்தக் கைதிகள் தொடர்பான விவரங்களைக் கையளிப்பது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் காரணமாக, மனித உரிமைகள் மீறப்பட்டன என்பது தொடர்பான ஆவணங்களைத் தயாரித்து அதனை உரியவர்களிடம் கையளிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். மேலும் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் இப்போது சர்வதேசமும் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. அரசியல் கைதிகளுடைய விடுதலை என்பது, தமிழ் மக்களுடைய ஒரு கோரிக்கையாக மட்டுமல்ல, அது தெற்கில் இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையாகவும் அமைய வேண்டும்.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்கின்ற குரல் தெற்கிலும் இடம்பெற வேண்டும். அரசியல் கைதிகள் எந்த விதமான நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



## மோட்டார் சைக்கிள்கள் விபத்து; மூவர் படு காயம்

கல்முனை-அக்கரைப்பற்று பிரதான வீதியில் காரைதீவு கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் பலத்த காயமடைந்த நிலையில், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது அக்கரைப்பற்றில் இருந்து கல்முனை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் வந்து கொண்டிருந்த மற்றும் ஓர் மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தொடர் போராட்டங்களுக்கு பொதுமக்கள் கண்டனம்!

### அமைச்சர் வெளியிட்ட தகவல்

கொவிட் தொற்றுக்கு மத்தியில் சில குழுக்களின் தொடர் போராட்டங்களுக்கு பொதுமக்கள் கண்டனம் தெரிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன, கொவிட் தொற்று பரவுவதால் ஏற்படும் அபாயம் தொடர்பாகப் பொதுமக்கள் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இவை இடைநிறுத்தப்பட்டன.

உலகம் தொற்றுநோயை எதிர்கொள்ளும்போது, எதிர்ப்பாளர்கள் வீதிகளில் இறங்கி பெரியகொத்தளஉருவாக்கினர் என்று அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். இதனிடையே, திருமணங் கள் மற்றும் இறுதிச் சடங்குகள் அபாயகரமானவை என்று அவர் குறிப்பிட்டார், இவ்வாறான நேரங்களில் அதிக எண்ணிக்கையிலான மக் கள் கூடுகின்றமையால், வைரஸ் பரவுவதைக் குறைத்து உயிர்களைக் காப்பாற்ற இதுபோன்ற கூட்டங்கள் தடுக்கப்பட வேண்டும். -என அவர் மேலும் கூறியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அவசியப்படும் நிபந்தனை

**ஈழத் தமிழர்களை ஏமாற்றியதே சிங்கள சிறிலங்காவின் கடந்த ஒரு தசாப்த கால சரித்திரம்.**

**சிறுபான்மையினரான தமிழர்களை மட்டுமல்ல, அவர்களுக்காக அவ்வப்போது குரல் கொடுத்துக் களத்தில் இறங்கிய இந்தியா உட்பட்ட சர்வதேச தரப்புக்களையும் கூட ஈழத் தமிழர் விவகாரங்களை ஒட்டி பகிரங்கமாக வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் கொழும்பு ஆட்சிப்பீடங்கள் கயிறைக் கொடுத்து ஏமாற்றி வந்துள்ளன என்பதுதான் சரித்திரம்.**

**மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் எவையும் இது விடயத்தில் விதி விலக்கல்ல. எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்.**

**தனக்குத் தேவையான – கட்டாயமான – தருணங்களில் பேரம் பேசுவது போல பேச்சு நடத்துவது, சமரச முயற்சிகளில், உண்மையான ஈடுபாட்டுடன் களமிறங்குவதாக நடிப்பது, ஒப்பந்தங்கள் செய்வது என்று பாசாங்கு பண்ணி விட்டு செயலில் எதையுமே நிறைவேற்றாமல், ஏமாற்றுவதுதான் சிங்களத்தனம் என்ற படிப்பினை தமிழர்களுக்கு ரெம்பவே உண்டு.**

**இப்போது மீண்டும் சிங்களத்துக்கு ஒரு நெருக்கடி. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48ஆவது கூட்டத் தொடர் வரும் செப்ரெம்பர் 13ஆம் திகதி – இன்னும் ஒரு மாதத்தில் – ஆரம்பமாகின்றது.**

**கடந்த 46ஆவது கூட்டத் தொடரில் – கடந்த மார்ச்சில் – இலங்கைக்கு எதிராகக் கடுமையான வாசகங்கள் அமைத்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய மேற்குலக நாடுகள் இன்னும் நெருக்கடிதரக் கூடிய புதிய பிரேரணை ஒன்றை வரும் கூட்டத் தொடரில் சமர்ப்பித்து இலங்கைக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை எடுப்பதற்கு முனைப்புக் காட்டி நிற்கின்றன என்பது கண்கூடு.**

**இந்தச் சமயத்தில் இந்த சர்வதேச நெருக்கு வாரத்தில் இருந்து தப்புவதற்காக மீண்டும் இன்னொரு ஏமாற்றுதல் நாடகத்துக்குக் கொழும்பு தயாராகும் என்பதும் திண்ணம்.**

**அதிகாரத்துக்கு – ஆட்சிக்கு – வந்து ஒன்றரை வருடங்களாகத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து ஏறெடுத்தும் பார்க்காத நாட்டின் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு – நான் பௌத்த, சிங்கள மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்று பெருமையோடு பீற்றித் திரிந்த நாட்டின் தலைவருக்கு – இப்போது திடீரெனத் தமிழர் தேசியப் இனப் பிரச்சினை மீது கரிசனை பிறந்திருக்கின்றது. நேரடிப் பேச்சுக்கான சமிக்ஞைகள் அவர் தரப்பிலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.**

**அதையொட்டி தமிழர் தரப்பில் முக்கிய கட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ தனது பிரதிபலிப்பைக் காட்டியிருக்கின்றது.**

**ஏமாற்று நாடகங்கள் என்ற பல அனுபவங்களைத் தமிழர்கள் கடந்து வந்தமையைச் சுட்டிக்காட்டியுள்ள ரெலோ –**

***"இந்தக் கசப்பான பல அனுபவங்களைக் கடந்து வந்த பின்னரும் பேச்சுக்கு அழைத்தவுடன் கூட்டமைப்பு ஓடி வந்து விடும் என்று அரசோ அல்லது வேறு தரப்புகளோ கருதுமானால் அது வேடிக்கையாகும்"* – என்று குறிப்பிட்டுள்ளது.**

***"பேச்சுவார்த்தை அவசியமானது. நாம் அதற்கு எதிரானவர்கள் அல்லர். அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தி சாதகமான சூழலை ஏற்படுத்துவது அரசின் கடமை"* – என்றும் ரெலோ சுட்டிக்காட்டியுள்ளது.**

***"பேச்சுக்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை விடுத்து, சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக் கொள்வதற்காகத் தமிழர் தரப்புடன் பேச்சு என்ற அரசாங்கத்தின் தந்திரோபாய நடவடிக்கைக்கு தமிழ் மக்களைப் பலியாக்க நாங்கள் ஒரு போதும் அனுமதியோம்"* – என்றும் ரெலோ வெளிப்படையாகக் கூறியிருக்கின்றது.**

**ரெலோ குறிப்பிடுகின்றமை போல பேச்சு அவசியமானது தான். தீர்வுக்கு அதுவே மார்க்கம். ஆனால் அதற்காக பேச்சு என்ற பெயரில் இன்னொரு தடவை ஏமாற்றப்படுவதற்கும், காலத்தை இழுத்தடிப்பதற்கும் தமிழர்கள் இடமளிக்கமுடியாது.**

**இதற்கு இரண்டுக்கும் இடையில் ஒரு நியாயப்பாட்டுக்கான ஓர் ஏற்பாட்டுக்கு வருவது அவசியம். சில சமயங்களில் அது பேச்சுக்கான நிபந்தனையாக அர்த்தப்படுத்தப்படவும் கூடும். ஆனால் அதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.**

# யாழில் 86 கோடியே 40 லட்சம் ரூபா செலவில் நிறைவடைந்துள்ளன கிராமியத் திட்டங்கள்

## அங்கஜன் எம்.பி. பெருமிதம்



யாழில் நிறைவான கிராமத்திட்டத்தின் கீழ் (சப்ரீகம) சுமார் 86 கோடியே 40 லட்சம் ரூபா செலவில் 793 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்ட திட்டங்களே இவ்வாறு நிறைவடைந்த நிலையில் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டம் ஆரம்பித்தபோது பலர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர். சிலர் குறித்த திட்டத்துக்கான நிதி தொடர்ந்து கிடைக்குமா? அல்லது அடிக்கல் நாட்டுடன் முடிந்துவிடுமோ என்ற அச்சத்தை வெளியிட்டனர்.

நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் உறுதியான செயற்பாடுகள் காரணமாக மேற்படி திட்டம் தற்போது நிறைவடைந்துள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவில் 5 திட்டங்களுக்காக சுமார் ஒரு கோடியே 10 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 40 திட்டங்களுக்காக சுமார் 5 கோடியே 90 லட்சம் ரூபாவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 33 திட்டங்களுக்காக சுமார் 5 கோடியே 50 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 18 திட்டங்களுக்காக சுமார் 2 கோடியே 90 லட்சம் ரூபாவும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 54 திட்டங்களுக்காக 7 கோடியே 90 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 14 திட்டங்களுக்காக சுமார் ஒரு கோடியே 70 லட்சம் ரூபாவும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 33 திட்டங்களுக்காக சுமார் 5 கோடியே 50 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 37 திட்டங்களுக்காக சுமார் 4 கோடியே 90 லட்சம் ரூபாவும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 37 திட்டங்களுக்காக சுமார் 5 கோடியே 90 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 66 திட்டங்களுக்காக சுமார் 8 கோடியே 90 லட்சம் ரூபாவும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 52 திட்டங்களுக்காக சுமார் 6 கோடியே 10 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 80 திட்டங்களுக்காக சுமார் 11 கோடியே 90 லட்சம் ரூபாவும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 50 திட்டங்களுக்காக சுமார் 6 கோடியே 90 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 58 திட்டங்களுக்காக சுமார் 6 கோடியே 90 லட்சம் ரூபாவும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 29 திட்டங்களுக்காக சுமார் 3 கோடியே 50 லட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உரிமை கோரப்படாத 40 கொவிட் சடலங்கள் ஓட்டமாவடியில் புதைக்க நீதிமன்றம் உத்தரவு


உரிமை கோரப்படாத 40 கொவிட் சடலங்களை ஒட்டமாவடி மயானத்தில் புதைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொவிட் தொற்று காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்த நபர்களின் சடலங்களே இவ்வாறு ஓட்டமாவடியில் புதைக்கப்பட்டுள்ளன.

களுபோவில மற்றும் றாகம வைத்தியசாலைகளில் உரிமை கோரப்படாத சடலங்களும் இவ்வாறு புதைப்பதற்கும் தகனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை பிணவறைகளில் இடப்பற்றாக் குறை காரணமாக சில வைத்தியசாலைகளில் குளிரூட்டப்பட்ட கொள்கலன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# ஆசிரியர், அதிபர்களின் வேதன முரண்பாடுகளுக்கு உடனடித் தீர்வு சாத்தியமில்லை என்கிறார் பீரிஸ்



கடந்த 24 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வேதன முரண்பாடுகளுக்கு உடனடித் தீர்வு வழங்குவது நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அமைச்சரவை கூடிய போது, அமைச்சரவை அமைச்சர்கள் இந்தக் கருத்தை முன்வைத்தனர் என அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் பிரச்சினைகளுக்கு முடிவு எடுக்கப்பட்டால், அது ஏனைய பொதுத்துறை சேவைகளையும் பாதிக்கும். எனவே, முழு பொதுச் சேவைக்கும் நியாயமான ஒரு தீர்வைக் கொண்டு வர முடிவு செய்யப்பட்டதாக ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நாட்டின் தற்போதைய மற்றும் கடுமையான நோய் மற்றும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, மூன்று மாதங்களுக்குள் தாக்கல் செய்யப்படும் பாதீட்டின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வர அமைச்சரவை முடிவு செய்துள்ளனர்.

நாட்டில் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, அனைத்து அரசாங்க வருமானமும் சரிந்துவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களை வாழ வைப்பது அவசியம் என்று அமைச்சர் ஜி எல் பீரிஸ் கூறியுள்ளார்.

# சீனாவில் பரவிய வைரஸ் திரிவின் வேகத்தை விடவும் இருமடங்கு அதிக வேகத்தில் இங்கு பரவும் டெல்டா

கொவிட் வைரஸ் திரிபான டெல்டா இலங்கையில் பரவும் வேகம் சீனாவின் ஹுவ்ஹான் நகரில் பரவிய வைரஸ் திரிபுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கு எனத் தெரியவந்துள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ உயிரியல் ஆய்வுப் பிரிவு நடத்திய பரிசோதனையில் இது கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் இதற்கு முன்னர் பரவிய திரிவுகளுடன் ஒப்பிடும் போது, டெல்டா திரிபு பரவும் வேகம் 40 வீதத்தில் இருந்து 60 வீதம் அதிகமான நிலைமையில் இருக்கிறது.

இந்த விடயத்தை மேற்படி ஆய்வு பிரிவின் தலைவரான பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 42

ந.வித்தியாதரன்

1982 ஆரம்பத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. நான் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளில் பணி ஆரம்பித்து சுமார் இரண்டு வருடங்கள் கடந்திருக் கும். பத்திரிகைப் பணியில் சேர்ந்தபோது எனக்கு ஒதுக்கப்பட்ட 'ரவுண்ட்ஸ்' இரண்டு. ஒன்று - நீதிமன்றச் செய்திகள். மற்றது - விளையாட்டுத்துறைச் செய்தி கள். ஆங்கிலத்தில் **Courts and Sports.**

நான் பாடசாலைக் காலத்தில் யாழ்ப் பாணத்தில் வரவேற்பு பெற்ற விளை யாட்டு வீரன் என்பதை குறிப்பிட்டு இருந் தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக் கலாம். பாடசாலையில் கிரிக்கெட், உதை பந்தாட்டம், ஹொக்கி, கூடைப்பந்தாட் டம், மெய்வன்மை ஆகிய 5 துறைகளி லும் முன்னணி வீரனாகத் திகழ்ந்து இருக்கி றேன். உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை தேசிய இளைஞர் அணி யில் விளையாடி இலங்கையை பிரதி நிதித்துவப்படுத்தும் அளவுக்கு முன்ன ணிக்கு வந்த - ஒரு காலத்தில் வடக்கில் அதிகம் சிலாகிக்கப்பட்ட - ஒரு கோல் காப்பு வீரன்.

என்னை வைத்துக்கொண்டுதான் அந்த காலகட்டத்தில் தினபதி விளை யாட்டு துறைக்கு என ஒரு பக்கத்தை ஒதுக்கி, தினசரி செய்தி வெளியிட்டது என்பது எனக்கு கிட்டிய பெருமை.

அப்போது எனக்கு வயது 22 தான்.

பின்னாள்களில் 90 களின் பிற்பாதி யில் யாழ்குடாநாட்டை இராணுவம் மீளக் கைப்பற்றிய சமயத்தில் 'உதயன்' ஆசிரியர்பணிக்கு மேலதிகமாக பி.பி.ஸி. தமிழோசையின் யாழ் செய்தியாளராக பணியாற்றினேன். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கிருந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு மற்றும் அவரும் அவரது தாய், சகோதரர், அயலவர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட் டமை, துரையப்பா விளையாட்டு அரங்க மனித புதைகுழி மற்றும் அப்போது குடா நாட்டில் இடம்பெற்ற பல்வேறு இராணுவ அத்துமீறல்கள் பற்றிய விடயங்களை உலகின் பல பாகங்களிலும் உள்ள தமி ழர்கள் பி.பி.ஸி. தமிழோசை ஊடாக என் குரலில் கேட்டிருப்பார்கள். அவர்க ளில் பலருக்கு அது நினைவில் இருக்கக் கூடும்.

இரண்டாயிரமாம் ஆண்டில் ஆனை யிறவு முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டு இருந்த சமயம் அது. *"இதோ நான் யாழ்ப்பாணத்திலி ருந்து தொலைபேசி ஊடாக உங்களுக் குச்செய்தி வழங்கிக் கொண்டிருக்கிறேன். அது ஆனையிறவுத் தொலைத்தொடர்பு கோபுரம் ஊடான இணைப்புகளினா லேயே சாத்தியமாமாகி உள்ளது. இந்த தொடர்பு எப்போது துண்டிக்கப்படுகிறதோ அப்போது, அதுவரையில் புலிகளின் முற்றுகையில் இருக்கும் ஆனையிறவுத் தளம் புலிகளின் வசம் வீழ்ந்து விட்டது என்று அர்த்தம்"* என்ன நான் முதல்நாள் கூறியமையை அன்று இரவு ஒளிபரப்பு செய்தது பி.பி.ஸி. தமிழோசை.

அடுத்த நாள் *"நேற்று இரவு எங்களு டன் தொலைபேசித் தொடர்பில் இருந்த யாழ்ப்பாணச் செய்தியாளர் வித்தியாதர னை இன்று காலை முதல் நாங்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. அவர் நேற்றிரவு கூறிய படி இன்று காலை ஆனையிறவுத் தளம் புலிகள் வசம் வீழ்ந்து விட்டது. அது தந்திரோபாய பின்வாங்கல் என்று அரச இராணுவம் கூறுகின்றது"* - என்று பி.பி. ஸி. தனது அன்றைய செய்தி அறிக் கையை ஆரம்பித்ததாக நினைப்பு.

இதை நான் இங்கு கூற வருவதற்கு காரணம் உண்டு. வானொலி ஊடாக நான் செய்தி முன்வைக்கும் முறைமை பி.பி.ஸி. தமிழோசை தயாரிப்பாளர்கள் ஆனந்தி, மணிவண்ணன், சிவராம கிருஷ்ணன், சீவகன் போன்ற பலராலும் வரவேற்கப்பட்டது.

அந்த இளம் வயதில் ஊடகத் துறைக் குள் நுழைந்து விட்ட எனக்கு அந்த வய தில் தோற்றம், குரல், செய்தி சொல்லும் உச்சரிப்பு போன்றவை தரமாக இருந்தன. தமிழ் மொழியிலும் நான் ஓரளவு தேர்ந்த வன் என்ற எண்ணம் - அது செருக்காகக் கூட இருக்கலாம் - என் மனதில் இருந்தது. அப்போதுதான் மெல்ல அறிமுகமாகிக் கொண்டிருந்த தொலைக்காட்சி சேவை யில் திரையில் தோன்றும் ஓர் அறிவிப்பாள ராக, செய்தி வாசிப்பாளராக வேண்டும் என்ற ஆசை மனதில் துளிர் விட்டிருந்தது.

அப்போது இலங்கையில் ரூபவாஹினி மட்டுமே இருந்ததாக நினைவு. ஐ.ரீ.என் னும் வந்து விட்டதோ தெரியவில்லை. ஆனாலும் அச்சமயத்தில் திரையில் தெரி யும் செய்தித்துறையினரோடு ஒப்பிடுகை யில் நான் ஒன்றும் குறைந்தவன் அல் லன் என்ற எண்ணம் - அகந்தை - என் மன தில் ஒடிக் கொண்டிருந்தது. இளமை யில் எனக்கு இருந்த மிடுக்கான - வசீகர மான - தோற்றமும் அந்தத் திமிர் எண் ணத்தை எனக்கு தந்திருக்கக் கூடும்.



என்னுடைய 'என் எழுத்தாயுதம்' நூலில் ஒரு விடயத்தை நான் குறிப்பிட் டிருக்கிறேன். எதிரும் புதிருமாக மோதும் அரசியல் தலைவர்களாக இருக்கலாம், புலிகள் உட்பட இயக்கங்களின் தலைவர் கள், தளபதிகள், இந்திய அமைதிப் படை யின் இராணுவ அதிகாரிகள் மற்றும் பல்துறை சார்ந்த பெரியோர்கள், பிரமுகர் கள், அரசு அதிகாரிகள் என இன்னோ ரன்ன வகையினர் யாராகவும் இருக்க லாம், இலங்கை இராணுவத்தின் தளபதி கள் வரை எந்த அதிகாரியாகவும் இருக் கலாம், அவர்கள் எல்லோரையும் என் வசப்படுத்தி வீழ்த்த என்னிடம் ஓர் ஆயுதம் இருக்கின்றது, சற்று நேரம் ஆற அமர இருந்து என்னுடன் அவர்கள் உரையாடு வார்களானால் என் பேச்சு, சிரிப்பு மூலம் ஒரு நல்லுறவை உருவாக்கும் விதத்தில் அவர்களை வசியப்படுத்தி விடுவேன், அத்தகைய என் சிரிப்புக்கும் அடங்காத ஒரு விண்ணர் (அவர் ஒரு 'வின்னரும்' கூட) இருப்பாராயின் அது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட் டாபய ராஜபக்ஷ மட்டும்தான், அவரிடம் என் புன்னகைக் கலை எடுபடவே இல்லை, அவர் மசியவேயில்லை, என் சிரிப்புக்கு அவர் இடம் கொடுக்கவே இல்லை - என்ற சாரப்பட என் நூலில் கருத்து தெரிவித்தி ருந்தேன்.

அந்த கோட்டாபய ராஜபக்ஷ என்னைப் பற்றி என்ன கருத்து கருத்து வைத்திருந் தார் என்பதை 2009 இல்லையே ஆஸ்தி ரேலிய நாட்டு வெள்ளைக்காரச் செய்தி யாளர் ஒருவர் அம்பலப்படுத்தி இருந்தார். முதல் நாள் அவர் எனது அலுவலகத்துக்கு வந்து என்னைப் பேட்டி காண்கிறார். அடுத்த நாள் காலையில் அவர் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திக்கச் செல்லும்போது அவரது கைத் தொலைபேசிக்கு ஒரு செய்தி வருகிறது. *"சற்று முன் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரி கைகளின் ஆசிரியர் வித்தியாதரன் வெள்ளைவானில் வந்தோரால் கடத்தப் பட்டு விட்டார்"* - என்பதுதான் செய்தி.

கோட்டாபயவைச் சந்திக்கச் சென்ற ஆஸி செய்தியாளர் அமோஸ், பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபயவிடம் முதன்முத லில் எழுப்பிய கேள்வி என்னை பற்றிய தாக இருந்தது.

*"நான் முதல் கேள்வியாக பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரனுக்கு நடந்தவற் றைக் கேட்டேன். அவருக்கு - கோட்டாபய வுக்கு - வந்த சீற்றம் எனக்கு ஆச்சரியத் தைத் தந்தது"* என்று குறிப்பிட்டு அதனை அப்படியே காணொலிச் செய்தியாக்கி இருக்கின்றார் அமோஸ்.

நீங்கள் **Google Search** போய் **N.Vithyatharan SBS TV** என்று கொடுத்துப் பார்த்தால் அந்த இரண்டு நிமிட செய்தி யில் என்னைக் குறித்து கோட்டாபய ராஜ பக்ஷ சீறும் விடயத்தை இன்றும் பார்க்க



லாம் .

ஆனால் அப்படி *"அவர் (வித்தியாதரன்) ஒரு பயங்கரவாதி என்று பொறுப்புடன் கூறுகிறேன்"* - என சத்தத்துடன் திட்டிய அதே கோட்டாபய ராஜபக்ஷ -

என் சிரிப்பு வசியத்துக்கு எடுபடாத ஒரே பிரமுகர் என நான் என் நூலில் விமர்சித்த அன்றைய பாதுகாப்புச் செயலாளர் -

அதற்குப்பின்னர் - 2015 இல் பதவியில் இழந்து இருந்த போது - அரசியலுக்கு வர முன்னர் - என்னை தமது மிரிஹான இல்லத்திற்கு அழைத்து, சோபா செட்டியில் தமக்கு அருகே அமர வைத்து, மிகுந்த மரியாதையோடு தேனீர் தந்து உபசரித்து, அன்புடனும் நட்புடனும் உரையாடி னார்.

அந்தச் சந்திப்பு முடிந்து வெளியே வந்த பின்னர் இரண்டு விடயங்களை உணர்ந்து கொண்டேன். என்னிடமிருக்கும் எனது பேனாவை விஞ்சிய ஆயுதமான என் சிரிப்பு ஆயுதம் - புன்னகை வசீகரம் - தோற்று விடவில்லை என்பதுதான் அது. அந்தத் திமிரில் சந்திப்பு முடிந்து வெளியே வந்ததும் என் நெருங்கிய நண்பன் ஒரு வனுக்கு திருப்தியுடன் ஒரு குறுஞ்செய்தி போட்டேன்.

**My pen is mightier than their gun** - என்று.

இது ஊடக ஜாம்பவான் எஸ்.டி.எஸ். சிவநாயகம் ஐயா நினைவுப் பகிர்வேயா யினும் அது எனது அனுபவம் வாயிலாக - பட்டறிவுப் பகிர்வு ஊடாக - அவரைத் தரிசிக்கும் ஒரு தொடர் என்பதால் ஆங் காங்கே - இடையிடையே என்னையும் நான் பீற்றிக் கொள்வது தவிர்க்க முடியாத தாக இருக்கும். வாசகர்கள் சற்று பொறுத் துக் கொள்வார்களாக.

சரி. இனி விடயத்துக்கு வருகிறேன். என்னுடன் நீண்டகாலம் பழகியவர்க ளுக்கு என் புன்னகை தந்திரம் - வசியம் - அவர்களை அறியாமலேயே அவர்க ளின் உள்ளுணர்வுக்குத் தெரியும்.

அவனவன் புன்னகையை வைத்து பெண்களையையோ மாற்று பாலர்க ளையோ வீழ்த்தும்போது நான் மட்டும் எனது செய்தி மூலங்களை மயக்கி வசீக ரித்து வீழ்த்த இயன்றவரை அதைப் பயன் படுத்திக்கொண்டேன். அவ்வளவு தான்.

சரி, இந்தப் புன்னகைக் கதை இந்த கட்டுரைக்கு ஏன் என்று நீங்கள் கேட்க லாம்.

சின்னத்திரைச் செய்தியாளனாக, அறிவிப்பாளனாக, 'அங்கராக' வரவேண் டும் என்ற எண்ணம் என் மனதில் ஓடிய தற்கு என் தமிழ் உச்சரிப்பு, சொல்லாடல், எனது தோற்றம், அத்தோடு புன்னகை வசீகரன் ஆகியவை தொடர்பில் அந்த வயதில் எனக்குள் இருந்த இறுமாப்பும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

அப்போதுதான் இலங்கை 1982 பெப்ரவரியில் முதலாவது டெஸ்ட் ஆட்டத் தில் இங்கிலாந்து உடன் மோதஜ் களம் தயாரானது. புதிதாக ஆரம்பிக்கப்பட்டி ருந்த ரூபவாஹினி அந்த டெஸ்ட் ஆட் டத்தை நேரடியாக ஒளிபரப்பு செய்வதற்குத் தமிழ் வர்ணனையாளர்களுக்கு விண் ணப்பங்கள் கோரியிருந்தது.

தமிழில் விளையாட்டுத்துறை ஊடகச் செய்திகளில் முன்னணியில் பேசப்படு கின்ற எனக்கு - இயைபாகவே சின்னத் திரையில் தோன்றும் தகுதி தொடர்பில் ஒரு சுய கணிப்பும் எதிர்பார்ப்பும் அதிக மாக இருந்தமையால், இந்த விளம் பரம் எனக்கானது, எனக்கு மட்டுமேயா னது என்று எண்ணம் ஓட தொடங்கி யது.

விண்ணப்பித்தேன். நேர்முக பரீட் சைக்கு அழைப்பு வந்தது.

இரண்டு சொல்லில் என் அந்த இள மைக்கால கனவுக்கு ஒரேயடியாக ஆப்பு வைத்தார் சிவநாயகம் ஐயா.

அதற்காக அன்று மனதுக்குள் அவ ரைத் திட்டித் தீர்த்துக் கொண்டேன்.

ஆனால் தடுமாற்றத்தில் இருந்த எனக் குச் சரியான வழிகாட்டலை, பார்த்த னுக்கு பரந்தாமன் உணர்த்தியமை போல வழங்கி இருக்கின்றார் அவர் என் பதை சில ஆண்டுகளிலேயே நான் உணர்ந்து கொண்டு விட்டேன்.

அதையும் வாசகருக்கு தருவேன். அப்போதுதான் 'தமிழ்த் தேசியம்' தொடர் பில் சிவநாயகம் ஐயாவின் உண்மை முகம் - அவர் மனதில் இருந்து ஆவேசம் - கொஞ்சமேனும் தமிழினத்துக்குப் புரி யும். அதை வெளிப்படுத்தி சமூகத்துக்குப் படைப்பதன் மூலம் அந்த ஜாம்பவானின் உண்மைத் தோற்றத்தை தமிழினத்துக் குப் புரிய வைப்பது அவரது சிஷ்யர்களில் ஒருவனான எனது கடமை என்று நினைக் கிறேன். அதனை நாளை பார்ப்போம்.


(வளரும்.....)

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 10

### மின்னியல் - விடைகள்

6. இறையோதற்று/ இரிய நிறுத்தி
7. நிக்குரோம்
8. வழுக்கும் செப்பமாக்கி
9. மின்குமிழ் பிரகாசமாகக் காணப்படும்
10. மின்குமிழின் பிரகாசம் குறையும், அம்பியர்மானியின் வாசிப்பு குறையும்
11. ஒளி உணரித் தடையி
12.



13. 1 - மின்குமிழின் பிரகாசம் குறையும்
 2 - ஒளி உணரித் தடையியின் மீதுபடும் ஒளியின் அளவு குறைவதால்
 3 - மின்குமிழின் பிரகாசம் கூடும்
 4 - ஒளி உணரித் தடையியின் மீதுபடும் ஒளியின் அளவு அதிகரிப்பதால்
 5 - ஒளிச் செறிவு கூட - தடை குறையும்
 ஒளிச் செறிவு குறைய - தடை கூடும்

**3.** 1 - பற்றாசு பிடித்தல் 2 - ஈயம்

**10.4.**

1- பயன்படுத்த வேண்டிய மின்னழுத்த வேறுபாடு (வோல்ற்று - V), மின்னழுத்த வேறுபாட்டில் விரயமாகும் வலு ( மின்சக்தியின் அளவு - W)

2 - மின்சாதனத்தை பழுதடையாமல் பயன்படுத்துவதற்கு, பயன்பாட்டிற்கு பொருத்தமான மின்உபகரணங்களை தெரிவு செய்து பயன்படுத்த

3 - தேவைக்குப் பொருத்தமான வகையில் மின்சாதனங்களைத் தெரிவு செய்தல், அதிக விளைதிறனுள்ள மின்சாதனங்களைத் தெரிவு செய்தல், பயன்படுத்துபவருக்கும் ஏனையோருக்கும் விபத்துக்கள் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பான முறையில் மின்சாதனங்களைப் பயன்படுத்தல்.

வீட்டு மின்சுற்றுக்கும் மின்சாதனங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பயன்படுத்துதல்.

4 - B

5 - நீர்த்திருகுபிடி, நீர் கசிவடையும் இடங்கள், அடுப்பு தீப்பற்றக் கூடிய இடங்களிலிருந்து மின்சாதனங்களை தொலைவில் வைத்துப் பயன்படுத்தல், மின்சாதனங்களைப் பயன்படுத்தும் முன்னர் அவற்றின் தொடுப்பு வடங்களில் சேதம் இருக்கின்றதாவென பரிசீலித்தல், பொருத்தமான குதைகளைப் பயன்படுத்தல்

6 - உயர் வாற்றுப் பெறுமானமுள்ள மின்சாதனங்கள் பலவற்றை ஒரே தடவையில் பயன்படுத்துவதால் மின்சுற்றில் அதிக மின்னோட்டம் பாய்தல் மிகையோட்டம் எனப்படும்.


7 - குறுஞ்சுற்றாக்கம் ஏற்படுவதால், ஒரே நேரத்தில் ஒரு குதையில் பல மின் சாதனங்கள் பயன்படுத்தல், மின்சாதனத்தில் குறிக்கப்பட்ட மின்னழுத்த வேறுபாட்டை விட (வோல்ற்) அதிகமான மின்னழுத்த வேறுபாட்டை பயன்படுத்தல்.

**10.5 மின்னோட்டத்தின் வெப்ப விளைவு**

1. அதிக தடைப்பெறுமானமுள்ள கம்பி ஒன்றினூடாக மின்னோட்டம் பாயும் போது மின்சக்தி வெப்பசக்தியாக நிலைமாறும். அதனால் கம்பி வெப்பமடையும். இது மின்னோட்டத்தின் வெப்ப விளைவு எனப்படும்.
2. சுடும்
3. கடத்தியின் தடைப்பெறுமானம் கூடும் போது உற்பத்தியாகும் வெப்பத்தின் அளவு கூடும்.
4. 1) நிக்குரோம் கம்பி 2) தடை அதிகம்
5. கடத்தியின் தடை, கடத்தியினூடு செல்லும் மின்னோட்டம்
6. கடத்தி தயாரிக்கப்பட்டுள்ள திரவியத்தின் இயல்பு, கடத்தியின் நீளம், கடத்தியின் தடிப்பு
7. 1) ✓ 2) ✓ 3) X 4) ✓
8. கணினிகளில் குளிர்த்தும் விசிறி பயன்படுத்தல், திரான்சிஸ்ரரால் உற்பத்தி செய்யப்படும் வெப்பத்தை குளிர்விக்க வெப்ப உறிஞ்சியைப் பயன்படுத்தல்.
9. நிக்கல், குரோமியம், இரும்பு

**10.6**

1. ஒளிகாலும் இருவாயி
2. பலவர்ணங்களைக் காலுகின்றன LED கள் பலவர்ண LED ஆகும்.
3. 1) அலங்காரச் சுற்றுக்களை அமைக்க,
 2) சுற்று/ உபகரணம் செயற்படுவதை பரிசோதிக்கும் காட்டி
4. A - நேர்முனை B - மறைமுனை
5. LEDன் நேர்முனை மின்கலத்தின் நேர்முனையுடனும் LEDன் மறை முனை மின்கலத்தின் மறைமுனையுடனும்
6.




**10.7**

1. மின்பாயும் கடத்தியில் காந்தப்புலம் உருவாதல் காந்த விளைவாகும்.
2. கடத்தியூடாக மின்பாயும் போது காந்தப்புலம் தோன்றுவதால்
3. ஆணியின் முனையில் குண்டூசி கவரும்
4. மின்னோட்டத்தைச் செலுத்தும் போது காந்தப்புலம் உருவாவதால் ஆணி கவர்ந்தது
5. எண்ணிக்கை குறையும்
6. அதிகரிக்கும்
7. மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
8. தற்காலிகமானது
9. சுருளின் மத்தியில் கடத்தியை பயன்படுத்தல், சுருளினூடாக மின்னோட்டத்தை அதிகரித்தல், சுருளில் சுற்றுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
10. மின்விசிறி, மின்மானி, மின் அரைப்பான், நீர்ப்பம்பி, சலவை இயந்திரம், சில தன்னியக்க ஆளிகள்

**10.8**

1. வாயுக் குமிழ்கள் வெளிவரும், நாகத் தகடு கரையும்
2. இரசாயனத் தாக்கம்
3. 1) நாகத்தகடு/காபன் கோல்களிற்கு அருகில் வாயுக்குமிழ்கள் வெளிவரும்.
 2) மின்சக்தி இரசாயன சக்தியாக மாற்றப்பட்டது.
 3) மின்சக்தியின் இரசாயன விளைவு
 4) நீரினுள் சில துளி ஐதரோக்குளோரிக் அமிலத்தை இடல்
 5) நீரின் மின் கடத்துதிறனை அதிகரிக்க
 6) வாயுக் குமிழ்கள் வெளியேறவில்லை
 7) மின்னோட்டம் பாயும் போதே காபன் கோல்களுக்கருகில் இரசாயனத் தாக்கம் நிகழும்
 8) மின்வாய்கள்
4. 1) மின்முலாமிடுதல்
 2) ஆபரணங்களிற்கு பொன்/ வெள்ளிமுலாமிட, இரும்பாலான பொருள்கள், துருப்பிடிப்பதை தவிர்ப்பதற்கு கல்வனைசுபடுத்தல்
 3) இரும்பின் மீது நாகம் பூசுதல்
 4) துருப்பிடித்தலைத் தவிர்க்க, பெறுமதிமிக்க தோற்றத்தைத் தர
5. வெள்ளி

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## மட்டு மாநகர சபை தற்காலிகமாக பூட்டு

மட்டக்களப்பு மாநகரசபை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையில் கடமையாற்றும் ஊழியர்கள் ஆறு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் மூன்று உத்தியோகத்தர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இந்த நிலையில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஏனைய ஊழியர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை புளி யந்தீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ராஜ்குமார் தலைமையில் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் மேலும் மூன்று ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமை தொடர்பாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலையில் மட்டக்களப்பு மாநகர சபை தற்காலிமாக மூடப்பட்டுள்ளதுடன், நோயாளர்களுடன் தொடர்புடையவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேநேரம் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

## சர்வ கட்சி மாநாடு ஒன்றை அரசு உடன் கூட்டவேண்டும்

அரசாங்கம் சர்வகட்சி மாநாடு ஒன்றை கூட்ட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் சுகாதார நெருக்கடி நிலைமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தாம் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கி வரும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் அரசாங்கத்தின் பிடிவாதமான நிலைப்பாடு வெளிப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டில் எரிபொருள் கையிருப்பு காலியாகி வருவதாகவும் எதிர்காலத்தில் நெருக்கடி நிலைமை உருவாகக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமையல் எரிவாயு மற்றும் பால் மா கொள்வனவு செய்ய மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் பெருந்தொற்று பிரச்சினை மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய பிரச்சினைகளால் நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கில் செயலமர்வொன்றில் கலந்துகொண்ட அரச உத்தியோகத்தர்கள் 22 பேருக்கு கொவிட்

கிழக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இயற்கை நிலைபேறான விவசாயம் என்ற தலைப்பிலான விழிப்புணர்வு செயலமர்வில் கலந்து கொண்ட 22 பேருக்கு கொவிட் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகச் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியின் இயற்கை வேளாண்மை என்ற தலைப்பிலான 5 நாள் செயலமர்வு கடந்த 2 ஆம் திகதி மட்டக்களப்பு சர்வோதயா தொண்டர் நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த செயலமர்வினை கிழக்கு மாகாண ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த செயலமர்வில் மாவட்டத்திலிருந்து பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து 168 பேருக்கு தொடர்ந்து 5 நாள்களாகச் சிறிய மண்டபமொன்றில் இந்த செயலமர்வு 6 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இந்த நிலையில் கடைசி நாளான 6 ஆம் திகதி அங்கு சென்ற பொதுச் சுகாதார அதிகாரிகள் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்ட நிலையில் சிலருக்கு கொவிட் தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளது.

அதில் கலந்துகொண்ட பலர் வீடுகளுக்குச் சென்ற பின்னர் அவர்களுக்குக் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து அவர்கள் வைத்தியசாலையை நாடியபோது அவர்களுக்கு கொவிட் தொற்று உறுதி கண்டறியப்பட்டது.

அதேவேளை இந்த செயலமர்வில் கலந்து கொண்ட சுமார் 70 பேரை அவர்களது பிரதேசங்களில் உள்ள வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# மூளை மரணித்தவர்கள் நாட்டை நிர்வகிக்கையில் மக்கள் கடும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும்!

## சந்திம வீரக்கொடி சாட்டை

மூளை பகுதியளவில் மரணித்துள்ள அதிகாரிகளால் நாடு நிர்வகிக்கப்பட்டால் ஏற்படும் சவால்களை நாட்டு மக்கள் எதிர்கொள்ள நேரிடும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் விசேட வைத்திய நிபுணர்களின் கருத்துக்களுக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும்.இல்லாவிடின்பாரியவிளைவுகள் ஏற்படும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்

எந்த அடிப்படையில் ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டு அரச ஊழியர்கள் அனைவரையும் சேவைக்கு அழைத்துள்ளார்.அரச சேவையாளர்கள் அனைவரும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளமை மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

மூளை பகுதியவில் மரணித்துள்ள அதிகாரிகளால் நாடு நிர்வகிக்கப்பட்டால் இனி வரும் காலங்களில் நாட்டு மக்கள் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.



கொவிட் தொற்றாளர்கள் குறைந்தளவு அடையாளப்படுத்தப்பட்ட போது நாடு முழுமையாக முடக்கப்பட்டது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் பின்பற்றப்பட்டன. இதனால் அப்போது நெருக்கடிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய முடிந்தது.

தற்போது நாட்டில் கொவிட் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், நாட்டைக் குறைந்தபட்சம் இரண்டு வார காலத்திற்காவது முடக்க வேண்டும் என விசேடவைத்தியர்கள்குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கோரிக்கைக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும். இல்லாவிடின் நாடு பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். – என்றார்.

# போராட்டத்தை தொடர்ந்தும் நடத்துவோம் இலங்கை ஆசிரியர் சங்கம் போர்க்கொடி

அதிபர் – ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கம்நிறைவேற்றும்வரையில்தொழிற்சங்கப் போராட்டத்தை தொடர்ந்தும் நடத்துவோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்

எமது தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் (புதன்கிழமை) 30 நாள்களாகின்றன. அதிபர் – ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றும் வரையில் தொழிற்சங்கப் போராட்டத்தைத் தொடர்ந்தும் நடத்துவோம்.

இதன்படி மாணவர்களுக்கு ஒன்லைன் மூலமாகக் கல்வி கற்பித்தல், (க.பொ.த) சாதாரண தர செயல்முறை பரீட்சைக்கு பங்கேற்பது ஆகியவற்றிலிருந்து விலகியுள்ளோம். அரச, அரை அரசாங்க தொழிற்சங்கங்களை எம்முடன் இணைத்துக்கொண்டு போராடுவதற்கு பேச்சு நடத்தி வருகிறோம். – என்றார்.

# தங்கையை துஷ்பிரயோகம் செய்த அண்ணன் மறியலில்!

மட்டக்களப்பில் சிறிய தாயாரின் 14 வயது மகளான தங்கையை கூட்டிச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த 19 வயது இளைஞனையும் இளைஞனுக்கு உதவிய அவனது அம்மம்மாவையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் கடந்த சனிக்கிழமை உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் குறித்த இளைஞனின் தந்தையார் இரு பெண்களை திருமணம் முடித்த நிலையில் இளைஞனின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்து வருகின்றமையையடுத்து இளைஞன் அவனது அம்மம் மாவுடன் வாழ்ந்து வருகின்றான்.

இந்த நிலையில் தந்தையார் இரண்டாவதாக திருமணம் முடித்த சிறிய தாயாரின் 14 வருடமும் 6 மாதங்களை கொண்ட தங்கையான சிறுமியை அவளது வீட்டில் இருந்து கூட்டிக் கொண்டு சென்று தனது அம்மம்மா வீட்டில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

சிறுமியின் தாயார் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை குறித்த இளைஞனையும் அவனது அம்மம்மாவையும் கைது செய்தனர்.

சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கைது செய்யப்பட்ட இருவரும் மட்டக்களப்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# பொதுப் போக்குவரத்து வழமைபோல் தொடரும்

## திலும் அமுனுகம தெரிவிப்பு

சுகாதார அதிகாரிகள் எந்தத் தடையும் விதிக்காததால் பொதுப் போக்குவரத்து சேவைகள் வழமை போல் செயல்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் பேசிய இராஜாங்க அமைச்சர், பொதுப் போக்குவரத்து சேவைகளை மட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் இதுவரை தங்களுக்கு அறிவுறுத்தவில்லை என்றும் கூறினார்.

நாடு இக்கட்டான கட்டத்தைக் கடந்து வருவதால் பஸ்கள் மற்றும் ரயில்களைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பு வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்குமாறு அவர் பொதுமக்களை வலியுறுத்தினார்.

அண்மையில் ஏனைய விதிமுறைகள் தளர்த்தப்பட்ட போதிலும், மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவில்லை மற்றும் அத்தியாவசிய தொழிலாளர்கள் மற்றும் அவசரநிலைக்காக மாகாணங்கள் முழுவதும் பயணம் செய்வதற்கு மட்டுமே பொதுப்போக்குவரத்து சேவைகள் செயற்பாட்டில்உள்ளன.

இந்த நிலையில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் ஆலோசனைப்படி, இந்த வாரத்திலிருந்து மாகாணங்களுக்கு இடையேயான பஸ்கள் மற்றும் ரயில்களில் சோதனைகள் அதிகரிக்கப்படும் என்றும் திலும் அமுனுகம கூறினார்.

# வவுனியா – தோணிக்கல் பகுதியில் உள்ள வீட்டில் புகுந்து இளைஞர்குழு அட்டகாசம்

வவுனியா, தோணிக்கல் பகுதியிலுள்ள வீட்டிற்குள் புகுந்த இளைஞர் குழுவொன்று வீட்டிலிருந்த தளவாடங்களை உடைத்துச் சேதப்படுத்தியதுடன், வீட்டாரையும் அச்சுறுத்தி விட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

தோணிக்கல், பொதுக்கிணறு வீதிக்கு அருகிலுள்ள பூட்டியிருந்த வீட்டுக்குள் புகுந்த இளைஞர் குழு அங்கிருந்தகதிரை,மேசைகள்உள்ளிட்டவீட்டுத்தளவாடங்களை உடைத்துச் சேதப்படுத்தியதுடன், கதவையும் உடைக்க முயன்றுள்ளனர்.

வெளியில் சென்ற வீட்டு உரிமையாளர்கள் வீட்டுக்கு வந்த போது மேற்படி இளைஞர் குழு வீட்டில் நின்றுள்ளதுடன், வீட்டு உரிமையாளருக்கும் அச்சுறுத்தல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# யுத்தத்துக்கு பயிற்றுவிக்கப்பட்ட இராணுவம் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது

## தலதா அத்துகோரல கூறுகிறார்

வைத்தியர்களுக்கு போர்க்களத்தில் சென்று யுத்தத்தில் ஈடுபட முடியாது. அதேபோன்று யுத்தத்துக்குப் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியமையையே ஆரம்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் கூறியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தாம் அரசாங்கம் கூறுவதையே செய்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் என்றால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுகின்றமையைச் செய்கின்றார்களா ? அல்லது சுகாதார அமைச்சர் கூறுகின்றமையைசெய்கின்றார்களா? கொவிட் கட்டுப்படுத்தல் தொடர்பில் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணரான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறுவகின்றமையைக் கூட அரசாங்கம் செவிமடுப்பதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் கூறிய விடயத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால்தற்போதுநாடாளுமன்றத்தில் அவர் தெரிவிக்கும்இதேவிடயத்தையே ஆரம்பத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியும் கூறியது. எவ்வாறுவைத்தியர்களுக்கு போர்க்களத்துக்குச்சென்று யுத்தம் புரிய முடியாதோ, அதேபோன்றுயுத்தத்துக்கு பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினரால்மருத்துவத் துறையுடன்தொடர்புடைய கொவிட் பரவலைக்கட்டுப்படுத்த முடியாது.

பொய் வாக்குறுதிகளைக் கூறி ஜனாதிபதித் தேர்தலில் மக்களை ஏமாற்றியமையைப் போன்றே, பொதுத் தேர்தலிலும் இந்த அரசாங்கம் செயற்பட்டுள்ளது. என்றார்.

# 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இம்மாத இறுதியில் முதலாவது தடுப்பூசி



*இம்மாத இறுதியில் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு முதலாவது தடுப்பூசியை ஏற்றக்கூடியதாக இருக்கும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் விசேட வைத்தியருமான பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.*

*30 வயதுக்கு மேற்பட்டவர்களுள் 96 வீதமானோருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவதுடோஸ்ஏற்றும்பணிநிறைவடைந்திருப்பதாக தெரிவித்த அவர். இவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*எதிர்வரும் சில தினங்களில் மேலும் பெருந்தொகை தடுப்பூசி நாட்டுக்கு கிடைக்கவுள்ளது என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் விசேட வைத்தியருமான பிரசன்ன குணசேன கூறினார்.*



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


## அங்கம் - 96

**287. மஹிந்த தனது வாக்குறுதியை நிறைவேற்றுவார் என இந்தியா கருதியா?**

இந்தியா நம்பியதோ, போருக்கான ஆதரவுக்கு முலாம் பூசியதோ, அவை போரின் பின்னாலான காலங்களில்தான் அறியப்பட்டன. ஆனால் இந்தியத் தரப்பினர் தாங்கள் விடுதலைப் புலிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை, இடைப்பட்ட தமிழ் மக்களைப் பற்றியே கரிசனை கொள்கிறோம் என்று திரும்ப திரும்பச்சொல்லிக் கொண்டார்கள். இந்தியாவின் இந்த ஆதரவால் ஸ்ரீலங்கா இந்தியாவின் மனிதாபிமான உதவிகளை ஏற்று அவர்களைக் களத்தில் பணியாற்றவும் அனுமதித்து, பின்னர் ஜே.வி.பியின் ஆட்சேபனைகளால் அவர்களது மருத்துவசேவைகளை முல்லைத் தீவிற்கு வெளியே திரியாய்ப் பகுதியில் செய்யுமாறு கோரினார்.

இந்தியாவின் நிலைப்பாடுகளால் விடுதலைப் புலிகளை அழிக்க தாங்கள் பாவிக்கும் உத்திகள் எவ்வளவு பாரதூரமானவையாக இருந்தாலும், மனிதாபிமானவற்றவையானாலும் அவை பற்றிய எதுவித ஆதங்கங்களும் அற்ற உன்மத்த அகங்காரம் இலங்கைத் தரப்புக்கு வளர்ந்தது.

வெள்ளைவான்கள் பறந்தன. போரைப்பற்றி எழுதியவர்கள், மக்கள் நடத்தப்படும் முறைகளை கேள்விக்கு உட்படுத்தியவர்கள், மனித உரிமைக் காவலர்கள், எல்லோரும், அரச பாதுகாப்பு ஏதுமின்றி பாதுகாப்பு



நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டு உயிருடன் வெளியே வந்த ஊடகவியலாளர் வித்தியாதரன்.

காரியதரிசி கோட்டாபயவின் அதிகாரங்களுக்குள்ளேயே வந்தார்கள். போரை வெல்வதற்காக அவர் நடத்திய முறைகளை யாரும் அரச மட்டத்தில் கேள்வி கேட்க வில்லை. உதாரணத்திற்கு நன்கு தெரிந்த சண்டே லீடர் ஆசிரியர் லசந்தாவின் கொலையைச் சொல்ல லாம். இறக்குமுன் அவர் மஹிந்தாவுக்கு எழுதிய கடிதத்தில் "என்னைக் கொல்லப் போகிறவர்கள் யாரென உனக்குத் தெரியும். ஆனால் அதனை உன்னால் கட்டுப்படுத்த முடியாது" என எழுதினார்.

அதே வழியில் மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளிடம் தூது அனுப்பிய உதயன் ஆசிரியர் வித்தியாதரன், அவருக்கு விடுதலைப் புலிகளினோடு இருக்கும் தொடர்புகள் பற்றி கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு எட்டு மணி நேரம் விசாரிக்கப்படுகின்றார்.

ஆறு நாள்கள் விசாரிக்கப்படுகிறார். அதைத் தொடர்ந்து சடுதியாக மரணச் சடங்கு ஒன்றில் நின்ற வேளை பல நூறு பேர் பார்த்திருக்க பகிரங்கமாகத் தாக்கப்பட்டு வெள்ளை வானில் கடத்தப்படுகிறார். விவரங்கள் ஒன்றும் தெரியாது என்று கைவிரித்த பொலிஸார் பின் அவர் கைது செய்யப்பட்டதாக அறிவித்தது. அவர் எந்த நீதிமன்றத்துக்கும் பாரப்படுத்தப்படவில்லை. மூன்று வாரங்கள் கழித்து கொழும்பு நீதிவான் ஜெகன் பாலபிட்டிய முன்னிலையில் 18



கொல்லப்பட்ட ஊடகவியலாளர் லஸந்த விக்கிரமதுங்க.

மார்ச் 2009 நிறுத்தி பிணையை மறுத்து, அவர் மேலும் விசாரணைகளுக்கு உட்படுத்த தங்கள் காவலில் மூன்று மாதங்களுக்கு தருமாறு விண்ணப்பித்தனர். அது தங்களுக்கு கோட்டாபய ராஜபக்ஷவினால் தரப்பட்ட தனிப்பட்ட பிரத்தியேக பணிப்பு என்று மூன்று மாத காலம் காவலுக்கு உத்தரவிட்டார். சர்வதேச அழுத்தங்களும், இந்தியாவின் ஈடுபாடும் அவர் உயிருடன் வெளிவருவதற்கு உதவின என அபிப்பிராயங்கள் இருந்தன. இந்தியா வேண்டிய நேரங்களில் தன் ஆளுமையைப் பாவித்தது. ஆனால் மஹிந்த, லசந்த மாதிரி தெரிந்தும் தெரியாமல் இருந்தாரா என்பதும் புரியவில்லை.ஆனால் விடுதலைப் புலிகளோ, அவர்களது புலம்பெயர் தரப்புகளோ, இந்தியாவிற்கெதிரான கடுப்பால் மேலைத்தேய நாடுகளையே நோர்வேயோடு நோண்டி கொண்டிருந்தார்கள்.

**288. தமிழ் மக்களுக்கு அவ்வளவு அவலங்களும் பாதிப்புகளும் நடந்து கொண்டிருந்தபோது, அவர்களை அப்படியான இனப்படுகொலையிலிருந்து பாதுகாக்க முன்வரும் நோக்கம் இந்தியாவிற்கு இருக்கவில்லையா?**

இருந்தாலும் அப்படியான சமிக்ஞைகள் எதுவும் கூட்டத்திற்கு சமுகம் தந்திருந்த தூதரக அதிகாரிகளிடமிருந்து வரவில்லை. அவர்கள் சிவசங்கர் மேனன் ஜனவரி 2009 அறிவித்ததையே சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்தும் எண்ணங்களில்லை, ஆனால் மக்களின் பாதுகாப்பை ஒட்டி நிச்சயமான அக்கறைகள் உண்டு, அவை பார்க்கப்படும் என்று விவரித்தனர்.

அன்றைய நிலையோடு 1987 ஐ தொட்டோம். அவர்கள் அரசியல் இப்பொழுது முற்றாக மாறிவிட்டது. அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் இந்தியாவின் நேச சக்திகளாக பார்த்தோம். இன்று அப்படியல்ல. இந்தியா அவர்களையும், தமிழ் மக்களையும் பிரித்து பார்க்கிறது. ஆகவே விடுதலைப் புலிகளை காப்பாற்ற இந்தியா எதுவும் செய்யப் போவதில்லை. வெளிநாடுகளில் இருந்து கூக்குரல் போடுபவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகளை காப்பாற்றத்தான் அந்த கோஷங்களை மக்களைக் காட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை இந்தியா மட்டுமல்ல, மற்ற நாடுகளும் புரிந்து கொண்டிருக்கின்றன. அகப்பட்டிருக்கும் மக்களை அப்புறப்படுத்தும் வழிவகைகளுக்காக சிறிய போர் நிறுத்தத்தை கேட்டிருக்கிறோம். அவற்றின் மூலம் விடுதலைப் புலிகள் அவகாசம் எடுத்துத் தற்கொலை தாக்குதல்களுக்கு வழி வகுப்பார்கள் என்ற பயம் உண்டு என்றும், அதனால் கோட்டாபய முற்றாக சரணாகதியையும் வெளியேறும் மக்களோடு விடுதலைப் புலிகள் ஊடுருவித் தப்பி மக்களோடு மறைய மாட்டார்கள் என்று உறுதிப்படுத்தும் வழிகளையும் நிர்ப்பந்திக்கிறார்.

இவைதான் சிக்கலான விடயங்கள். அவற்றை பற்றி பேச்செடுத்து வழிகள் தேட ஊக்கப்படுத்துவது நல்லது என அபிப்பிராயம் தந்தார்கள்.

ஆயினும் மற்றப் பக்கம் விடுதலைப் புலிகளும் தங்களது பாதுகாப்பிற்காக மக்களை விடுவிக்கவோ, சரணடையவோ ஒத்து வருகிறார்களில்லை. அவர்கள் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் பேச்சை கேட்டு, இந்தியத் தேர்தல் வரை தாக்குப் பிடித்தால் நிலைமை தங்களுக்குச் சாதகமாக மாறும் என்று நினைத்து வீணாக மேலும் அவலங்களை ஏற்படுத்துகிறார்கள். மக்கள் தாங்களாகவே அவலப்படவில்லை. அப்படி ஆக்கப்படுகிறார்கள் என்பது அவர்களது வாதம்.

அரசியலை விடுவோம், மக்களைக் காப்பாற்றும் ஒரு சர்வதேசக் கடமையை, மனிதாபிமானத்திற்காக இந்தியா செய்ய வேண்டாமா என்று கேட்டதற்கு வந்த பதில்கள், எல்லோரிடமிருந்தும் விறைப்பாகவே வந்தன

ஒரு நாட்டின் இறைமையை மீறி மனிதாபிமானத்திற்காக மக்களைக் காப்பாற்றும் கடமையை ஐ.நாவில் முன்னெடுப்பதற்கு கனடாவுடன் சேர்ந்து முக்கிய பங்கு தந்தவர் ஆஸ்ரேலியாவின் முன்னைய வெளியுறவு அமைச்சர் காரத் எவன்ஸ். தமிழர் பால் அக்கறை கொண்டவர். அமைச்சராக இருந்தபொழுது அங்குள்ள பல தமிழ் மக்களின் சமர்ப்பணங்களின் அடிப்படைகளில் அறிவுரைகள் தந்ததை குறிப்பிட்டிருந்தேன். போர் நடந்த சமயங்களில் சர்வதேச நெருக்கடிக் குழுவின் தலைவராக இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு காண, சர்வதேசத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தமையால், தமிழர் நிலை பற்றி தொடர்பிலிருந்து ஆதரவைக் கோரி, இப்படியான கூட்டத்திற்கு போவது பற்றியும் சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு அழுத்தங்கள் கொடுக்குமாறும் கேட்டிருந்தேன். அவருடனிருந்த முன்னைய பேச்சுக்களில் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் ஐ.நாவின் நேரடி நடவடிக்கைகளுக்கு ஆதரவு இருக்கிறது. எந்தத் தீர்மானமும் சீனா, ரஷ்யாவினால் நிராகரிக்கப்படும், நம்பிக்கையான பல நாடுகள் கூட அமெரிக்கா, இந்தியா போன்ற பலத்த நாடுகளின் முழுமையான முன்னெடுப்பு இல்லாததால் பல மற்றனவாக இருக்கின்றன.

நிலைமைகள் இப்படியான கஷ்டங்களை எதிர்நோக்குவதால் தாங்கள் முக்கியமாக ஸ்ரீலங்கா அரசுடன் தான் ஈடுபட்டு கொண்டிருக்கிறோம் என்று தகவல் தந்தார்.

போர் முடிந்தாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது இலகுவானதல்ல என்ற எனது உணர்வில் அவரை சர்வதேச ஆளுமை உள்ளவராக பதவியி



ஆட்சி நடத்திய ராஜபக்ஷ சகோதரர்கள்.

லிருந்து வெளியேறினாலும் ஈடுபட வேண்டும் என கேட்டிருந்தேன் அவரது பதில்தான் நேரடியாக இவை பற்றி ஸ்ரீலங்காவின் உயர் மட்ட அதிகாரிகளிடமும் வெளிநாட்டு மந்திரியுடனும் தொடர்பில் உள்ளேன் என அமைந்திருந்தது.

அவரது பதிலின் சுருக்கத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்.......)



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)

**இறைவா!**
**நீ பாரிய மரமெனின், அதனிடத்து**
**படரும் கொடி யான்!**
**நீ மணம் விரிக்கும் மலரெனின், அதில் சுழலும்**
**வண்டென நின்னை மொய்ப்பேன் யான்!**
**நீ பரந்து செல்லும் வானெனின்**
**அங்கு பளிச்சிடும் நட்சத்திரம் யான்!**
**நீ வானுயர்ந்த மலையெனின்**
**ஆங்கே பாயும் நீர்வீழ்ச்சி யான்!**
**நீ எல்லையற்ற சமுத்திரமெனின்**
**ஆறென உருவெடுத்து நின்னில் மூழ்குவேன் யான்!**

பகவான் பாபா தெலுங்கில் பாடிய இப்பாடலைப் பாடியின்புற்ற சாயி அடியார்கள் பிரார்த்தனைபற்றி அவர் கூறிய கருத்தில் திளைக்கின்றனர். 'தூங்கப் போவது மரணம். தூங்கி விழிப்பது பிறப்பு என்று உணருங்கள்.' காலை எழுந்ததும் பின்வருமாறு பிரார்த்தியுங்கள்:–


'இறைவா! தூக்கம் என்னும் கருப்பையிலிருந்து பிறந்துளேன். எந்தன் உள்ளத்திருங்கள். எந்தன் எண்ணம், சொல், செயல் யாவற்றையும் தூய்மை ஆக்குங்கள். புனிதமாக்குங்கள். இந்நாளில் யாரையும் யான் துன்புறுத்தேன். அவ்வாறே எனக்கும் துன்பம் வராதிருக்கட்டும். இன்றைய நாள் கருமங்களை நுமக்கு அர்ப்பணமாக ஆற்றுவேன் என்று திடசங்கற்பம் எடுத்துள்ளேன்.'

பின்வருமாறு துயிலப் போகும் வேளை எங்கள் பிரார்த்தனை அமையலாம்.

'சுவாமி! நின்னருளால் இன்றைய நாள்கருமங்களை நுமக்கு அர்ப்பணமாக ஆற்றினேன். எந்தன் சிறுசேவையை ஏற்று அருள்பாலிக்கவும்.'


'மானுடசேவை இறைசேவை' என்பதே பகவான் பாபா போதனை. இதனை விளக்க அவர் கூறிய ஒரு சம்பவம் பார்ப்போம்:–

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஷீரடி பாபா காலத்தில் நண்டேட் என்னுமிடத்தில் வாடியா என்ற பெருந்தனவந்தன் வாழ்ந்தான். 'என்னிடம் பாரிய செல்வமுண்டு. ஆனால் குழந்தைப் பாக்கியமின்மையால் மனம் வருந்துகிறேன். நிவாரணம் தேடி ஷீரடி போகிறேன். வழிகாட்டுங்கள்' இப்படி அவர் டாஸ்கனுவிடம் உதவிகோரினார்.



அந்தக் கிராமத்தில் இரக்க சிந்தை படைத்த கூலிவேலை செய்யும் ஏழை இஸ்லாமியர் மௌலவி சாகிப் உணவின்றிப் பலநாள் பட்டினிகிடந்து, உடல் மெலிந்து வருந்தி பாதையோரமாக அனாதரவாகக் கிடந்தார். அவர் துன்பத்தை அவதானித்த வாடியா அருகிலிருந்த உணவகத்தின் உரிமையாளரிடம் மௌலவி சாகிபுக்கு உணவு கொடுக்குமாறும், அதற்குரிய செலவினைத் தாம் தருவதாகவும் சொன்னார். உணவுண்டு மகிழ்ந்த மௌலவி சாகிப் கூறினான்: 'இறைவன் பெரியவன். அவன் அநாதைகளுக்கு சரணாலயம்.'

வாடியா தன்மனைவியுடன் பாபா தரிசனம் நாடி ஷீரடி சென்றார். பாபா வாடியாவிடம் தட்சணையாக ஐந்து ரூபா கோரினார். ரூபா நோட்டுகள் இல்லாத காலமது. சில்லறைகளைச் சிரமப்பட்டுத் தேடி ஐந்து ரூபாவைக் குத்திகளாக் கொடுத்தார். பாபா சொன்னார்: 'இல்லை, இல்லை. ஐந்து ரூபா வேண்டாம். ஒரு ரூபாவும் இரண்டு அணாக்களும் மட்டும் தாருங்கள். மீதியை யான் பெற்றுவிட்டேன்.'



'ஷீரடிக்கு இதுவே என்முதல் விஜயம். ஏற்கனவே மீதியை வாங்கி விட்டதாக இவரால் எப்படிக் கூற முடியும்? இவர் சுவாமியா இல்லை ஒருபைத்தியமா?' – இப்படிக்கூறியபடி இவர் மனைவியுடன் ஊர் திரும்பினார். அடுத்தநாள் டாஸ்கானு இவரைச் சந்திக்க வந்தார். அவரிடம் தனது சந்தேகத்தை எடுத்துக் கூறினார்.

உறுதியான பாபா பக்தரான டாஸ்கானு சொன்னார்: 'பாபா எதனையும் அர்த்தமில்லாமல் சொல்வதில்லை. அவரெங்கும் உள்ளவர். அனைவர் உள்ளங்களிலும் உறைபவர். அனைத்தும் அறிந்தவர். யாத்திரை போனபோது யாருக்காவது ஏதேனும் பணம் வழங்கினீரா? இல்லை உதவிசெய்தீரா?'

'ஆம்!ஆம்! ஏழையொருவருக்கு உணவு வாங்கிக் கொடுத்தேன். அதற்கு மூன்று ரூபா பதினான்கு அணா செலவாகியது.' என்றார்.

உடனே பாபா பக்தர் டாஸ்கானு விளக்கினார்: 'நீர் அந்த ஏழையின் உணவுக்குச் செலவளித்த பணத்தையும் கூட்டிப்பார்த்தால் கணக்கு சரியல்லவா? யார்யாருக்கு உதவுகிறோமோ, சேவையாற்றுகிறோமோ அத்தனையும் பாபாவையே சென்றடையும். எல்லாம் பாபா சித்தம்!'

மறுநாளே வாடியா டாஸ்கானுவையும் அழைத்துக்கொண்டு பாபாவிடம் சென்றார். அனைத்தும் அறிபவரான பாபா இருவரிடையே நடைபெற்ற கலந்துரையாடலை விவரித்தார். மன்னிப்புக் கோரிய வாடியா, ஒருகூடை பழங்களை பாபாவிடம் கையளித்தார்.

நான்கு வாழைப்பழங்களை கையிலெடுத்த பாபா அவற்றை வாடியாவின் மனைவியிடம் கையளித்தார். கட்டளையும் பிறப்பித்தார்: 'இவற்றை யாருக்கும் உண்ணக் கொடுக்காது, நீரே அனைத்தையும் உண்ண வேண்டும். நுமக்கு நான்கு ஆண்குழந்தைகள் பிறக்கும்.'

பாபா வாய்மொழி நிறைமொழி மாந்தன் ஆணையன்றோ! அடுத்த ஆண்டே வாடியாவுக்கு வாட்ட சாட்டமான புத்திரன் பிறந்தான். புளகாங்கிதத்தில் துள்ளிக் குதித்த வாடியா குடும்பத்தினர் ஷீரடி புனித யாத்திரை புக்கனர். தங்கள் புதல்வனை, பாபா தந்த அப்பேற்றை, அருட்கொடையை பாபாவின் பாதக்க மலத்திலே வளர்த்தி ஆசிபெற்றனர்.

# போதைப்பொருள் மீதான யுத்தத்தில் இராணுவத்துக்கு விசேட பங்குண்டு

இப்படிக் கூறுகிறார் அம்பிகா சற்குணநாதன்



கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, இலங்கை அரசாங்கம் போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பில் இராணுவமயப்படுத்தப்பட்ட அணுகுமுறையைக் கையாள்கின்றது.

'போதைப்பொருள்கள் மீதான யுத்தத்தில்' இராணுவம் விசேடமான வகிப்பங்கைக் கொண்டுள்ளதென இலங்கையின் மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் காணப்படும் போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்கள் பற்றிய ஆய்வை எடுத்துப் பார்த்தால், சட்டக் கட்டமைப்பு சிறந்த முறையில் போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்துவற்கு பொருத்தமற்றதாகக் காணப்படுவதாக இருக்கிறது.

சட்டம் மற்றும் கொள்கையில் காணப்படும் முறைமைப்படுத்தப்பட்ட குறைபாடுகள் மற்றும் பொலிஸார் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யும் போதும் தண்டனைக்குட்படுத்தப்படாமல் விடுவது சட்டத்தை மதிக்காத கலாசாரத்தை உருவாக்குகிறது.

இந்தக் காரணங்கள் பொலிஸ் துறையினுள் கடுமையான தவறான நடத்தை மற்றும் முறைகேடுகளுக்கு இடமளிக்கின்றன. இது போதைப்பொருள் தொடர்பான குற்றத்துக்கு கைது செய்யப்பட்டவரின் உரிமைகளைப் பாதிக்கின்றன.

உதாரணமாக, சிறையில் உள்ள நபர்கள் பொலிஸார் மீது போதைப்பொருள் மரங்களை நாட்டினர் எனஅடிக்கடி குற்றம்சாட்டினர்.

முக்கியமாக போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் காவலில் சித்திரவதைக்கும் மோசமான நடத்துகைக்கும் ஆளாக்கப்படுகின்றனர் என பரவலாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பெண்கள் கைது செய்யப்பட்டவுடன் பலவந்தமான உடற் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

போதைப்பொருள் சார் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பின்பும் பொலிஸாரால் இலக்கு வைக்கப்பட்டு தொந்தரவு செய்யப்படுகின்றனர்.

இலங்கை அரசால் நிர்வகிக்கப்படும் மற்றும் தனியார் போதைப்பொருள் புனர்வாழ்வு மையங்கள் காணப்படுகின்றன.

கந்தக்காடு மற்றும் சேனாபுர என்பன அனைவராலும் அறியப்பட்ட மிகப்பெரிய மையங்களாகும். இராணுவத்தால் நடத்தப்படும் நிலையங்களில், 'சிகிச்சை' என்ற பெயரிலோ அல்லது 'தண்டனை' என்ற பெயரிலோ பரவலாக வன்முறை இழைக்கப்படுகிறது.

இந்த மையங்களில் சிகிச்சை பெறுபவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் முழுவதும் வன்முறை, முறையற்ற நடத்துகை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகின்றனர்.

வன்முறைகள் மற்றும் தவறான நடத்துகைகள் தண்டனைக்காக அல்லது காரணமேயில்லாமல் அங்கு தடுத்து வைக்கப்படும் நபர்களின் மேல் இழைக்கப்படுகின்றன.

ஏதேனும் பிழை செய்தால் அல்லது எவரேனும் விதிமுறைகளுக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் அந்த நபர்கள் அடிக்கப்படலாம், வயரால் தாக்கப்படலாம், பலாத்காரமாக அதிகமான புஷ் அப்கள் செய்விக்கப்படலாம் அல்லது வேறு வகையான உடற்பயிற்சிகளை செய்வதற்கும் ஆளாக்கப்படலாம்.

ஒரு சந்தர்ப்பத்தில், சண்டையில் ஈடுபட்ட நபரொருவர் மூன்று நாள்களுக்கு தான் மரத்தோடு இணைத்து விலங்கிடப்பட்டேன் எனக் கூறினார்.

அத்தருணத்தில் அவர் மூன்று நாள்களும் நின்றுகொண்டிருக்க வேண்டி நேரிட்டது. சாப்பிடுவதற்கும் கழிப்பறையை பயன்படுத்தவுமே அவர் விடுவிக்கப்பட்டார். உணவு மற்றும் நீர் என்பன அவருக்கு கொண்டு வந்து கொடுக்கப்பட்டமையுடன் அவர் உறங்குவதற்கு சேர்க்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அடுத்த இரு வாரங்களுக்கு என்ன செய்தும் பயனில்லை

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

அடுத்த இரண்டு வாரங்கள் என்ன செய்தாலும் கொவிட் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நோயாளிகள் அதிகரிப்பதை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் என அந்த பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹன தெரிவித்துள்ளார்.

அடுத்த 14 நாள்களுக்கு இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த நாம் என்ன செய்தாலும் நோயாளிகள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை மிக சடுதியாக அதிகரிக்கும். இதனை சுகாதார கட்டமைப்பால் தாங்க முடியாது. நோயாளிகள் அதிகரிப்பதை உடனடியாகக் கட்டுப்படுத்தியாக வேண்டும். பொருளாதாரத்துடன் முகாமைத் துவம் செய்து, பொருளாதாரத்துக்கு குறைவாக பாதிப்பு ஏற்படும் வகையில் அனைத்து சமூக ஒன்றுகூடல்களையும் நிறுத்த நேரிடும்.

மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையில் பயணக் கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்த வேண்டும். அத்துடன் தேவையற்ற வகையில் நிறுவனங்களுக்கு ஊழியர்கள் அழைக்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

நோயாளிகள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தவில்லை என்றால், நாம் அனர்த்தத்தை நோக்கி தள்ளப்படுவோம். நாம் நடவடிக்கை எடுக்க காலம் தாழ்த்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சில உயிர்கள் பலியாகும்.

இதனால், இதற்கான பொறுப்பு நம் அனைவருக்குமானது. கீழ் மட்டத்தில் கண்டறியப்படும் தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் தொடர்பான தகவல்கள் மக்களுக்கு செல்லாத காரணத்தால், அவர்களுக்குள் அச்சமோ, உரிய புரிதலோ ஏற்படாது எனவும் உபுல் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைப் பெண் மரணம் மன்னிப்புக் கோரிய ஜப்பான்

தடுப்பு முகாமில் இலங்கைப் பெண் மரணித்த விவகாரம் தொடர்பாக ஜப்பான் மன்னிப்பு கோரியுள்ளது.

குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண் மரணித்தமைக்காக மன்னிப்பு கோருவதாகவும், தடுத்து வைக்கும் முறையில் மாற்றம் கொண்டுவரப்படும் எனவும் ஜப்பான் உறுதியளித்துள்ளது.

ஜப்பானிய நீதி அமைச்சர் யாகோ காமிகாவா இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

33 வயதான விஸ்மா சந்தமாலி என்ற பெண்ணே இவ்வாறு ஜப்பானில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.

வீசா காலம் முடிவடைந்தும் ஜப்பானில் தங்கியிருந்த காரணத்துக்காக சந்தமாலி தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் குறித்த பெண் வயிற்று வலி உள்ளிட்ட சுகாதார கேடுகள் பற்றி குறிப்பிட்ட போதிலும் அதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தமாலியின் மரணத்துக்காக அவரது தாய் உள்ளிட்ட உறவினர்களிடம் மன்னிப்பு கோருவதாக நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு தடுப்பு முகாம்களில் போதுமான வசதிகள் ஏற்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜப்பானிய அரசாங்கத்தின் மன்னிப்பு இந்த சம்பவத்தின் பாரதூரதன்மைக்குப் போதுமானதல்ல எனவும் சந்தமாலியின் இறப்பிற்கு யார் பொறுப்பு என குடும்பத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# வெளிநாட்டு விவாகரத்து தீர்ப்புகளுக்கு இங்கும் அங்கீகாரம் வழங்க தீர்மானம்

கொழும்பு, ஒக. 12

வெளிநாட்டு நீதிமன்றங்களில் வழங்கப்படும் விவாகரத்து மற்றும் சட்ட ரீதியான பிரிந்து வாழும் தீர்ப்புகளுக்கு அங்கீகாரம் வழங்க இலங்கை தீர்மானித்துள்ளது.

திருமணம் செய்துக்கொண்டு வெளிநாடுகளுக்கு சென்ற இலங்கையர்கள், அந்நாடுகளில் தாக்கல் செய்யும் விவாகரத்து வழக்குக்கள் தொடர்பான தீர்ப்புகள் இலங்கையில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

இதன் காரணமாக விவகாரத்து பெற்ற தம்பதியினர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமையைக் கவனத்தில் கொண்டு அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் பெற்ற விவாகரத்தை அங்கீகரிக்க வேண்டுமாயின் வெளிநாடுகளில் விவாகரத்து பெற்ற தம்பதிகள் இலங்கையிலும் விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும்.

# இயற்கைப் பசளைக்கு இறக்குமதி அனுமதி

**பெரும் போக பயிர் செய்கைக்காக இயற்கை பசளையை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

**பெரும் போகத்துக்கான தேவையை உள்நாட்டு பசளை உற்பத்தியாளர்களால் பூர்த்தி செய்ய முடியாது என்ற காரணத்தால், இயற்கை பசளையை இறக்குமதி செய்ய இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**கமத்தொழில் அமைச்சர் தாக்கல் செய்ய அமைச்சரவை பத்திரத்துக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**இயற்கை பசளை இறக்குமதி செய்து விநியோகிக்க இலங்கை பசளை நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களிடம் விலை மனுக்களை வழங்குமாறு அழைப்பு விடுத்துள்ளன.**

# தனிமைப்படுத்தல் சட்டம் மீறல்; 138 பேர் கைது!

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் தனி மைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 138 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 53 ஆயிரத்து 942 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 50 ஆயிரத் துக்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏனையோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

# கொரோனா இல்லை என்று வீட்டுக்கு சென்ற நபர் சாவு!

## இரண்டாவது பரிசோதனையில் தொற்று உறுதி

கடும் இருமல் மற்றும் காய்ச்சலுடன் காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு சென்ற ஒருவருக்கு கொரோனா தொற்றவில்லை எனக் கூறி வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அன்றைய தினம் இரவே அவர் உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த பின்னர் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர் கொரோனாத் தொற்றாளி என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காலி யக்கலமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 45 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனவும் அவர் 5 பிள்ளைகளின் தந்தை எனவும் காலி நகர திடீர் மரண விசாரணை அதிகாரி கூறியுள்ளார்.

கடும் இருமல் மற்றும் காய்ச்சல் தொடர்ந்தும் காணப்பட்டதன் காரணமாக அவர் கடந்த 6 ஆம் திகதி சிகிச்சை பெற கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் பின் அவர் கொரோனா தொற்றாளி அல்லர் எனக் கூறியுள்ளனர்.

இதனையடுத்து அவர் வெளி நோயாளர் பிரிவில் மருந்துகளைப் பெற்றுக்கொண்டு வீட்டுக் குச் சென்றுள்ளார்.

வீட்டில் தனியறையில் தங்கிருந்த அவருக்கு அன்றைய தினம் இரவு நோய் நிலைமை அதிகரித்துள்ளது.

மீண்டும் அவர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில் இறந்த நபர் கொரோனா தொற்றாளி எனத் தெரியவந்துள்ளது.

# வெளிநாடு செல்லவுள்ளவர்கள் அவர்கள் செல்லும் நாடு அங்கீகரிக்கும் தடுப்பூசியை பெறுவதற்கு அரசு ஏற்பாடுகள்

வெளிநாடு செல்லவுள்ளவர்கள் தாம் செல்லவுள்ள நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த விடயத்தை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

உயர்கல்வி, வியாபாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்காக வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ளவர்கள் அது தொடர்பில் உரிய ஆவணத்தைச் சமர்ப்பித்து தாம் செல்லவுள்ள நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

குறிப்பிட்ட சில நாடுகள் சில தடுப்பூசிகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நாடுகள் சில தடுப்பூசிகளை ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்த குறிப்பிட்ட நாடுகளுக்கு உயர் கல்வியைத் தொடர்வதற்காக, வியாபார நடவடிக்கைகளுக்காக அல்லது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிகழ்வுகளில் பெற்றோர் கலந்துகொள்வதற்காக செல்ல வேண்டியேற்படும்.

அவ்வாறானவர்கள் உரிய ஆவணங்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சமர்ப்பித்து தாம் செல்லவுள்ள நாடுகளில் அங்கீகரிக்கப்படுகின்ற தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.



இணையவழியூடாக இதற்கு விண்ணப்பிக்க முடியும். இவ்வாறானவர்களுக்கு வழங்குவதற்காக ஒரு தொகை தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கடமைகளைப் பொறுபேற்றார் துமிந்த சில்வா



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, செவ்வாய்க்கிழமை முற்பகல் தனது கடமைகளைப் பொறுபேற்றுள்ளார்.

இந்த நிகழ்வில் துறைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த உட்பட இராஜாங்க அமைச்சர்கள் சிலர் கலந்து கொண்டனர்.

சில தினங்களுக்கு முன்னரே துமிந்த சில்வா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தண்டனை அனுபவித்து வந்த துமிந்த சில்வா, அண்மையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தவறை உடனே திருத்திக்கொள்ளாவிடின் கூண்டோடு அகற்றப்படுவர் ராஜபக்ஷக்கள்

## அடித்துக் கூறுகின்றார் முருந்தெட்டுவே ஆனந்த தேரர்

**படுமோசமான அரசை உருவாக்குவதற்கு முன்னின்று செயற்பட்டதால் நரகத்துக்குச் செல்ல நேரிடும் என நாட்டு மக்கள் எம்மை விமர்சிக்கிறார்கள். மக்கள் வழங்கிய பெரும்பான்மைப் பலம் தவறாகச் செயற்படுத்தப்படுகின்றது. அரசு தவறுகளை உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் ராஜபக்ஷக்கள் அனைவரும் வெகுவிரைவில் அரசியலில் இருந்து மக்களால் ஓரங்கட்டப்படுவார்கள்.**

**- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சொல்வதையும், வழங்கும் ஆலோசனைகளையும் ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை. நாடு இன்று பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்நிலைமை குறித்து ஏற்கனவே அறிவித்துள்ளோம். உரிய இடத்துக்குப் பொருத்தமான நபர் சேவையில் அமர்த்தப்படாமை தற்போதைய நெருக்கடிகளுக்கு ஒரு காரணியாகும்.

கொரோனா வைரஸ் தொடர்பில் முறையான கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை. எல்லை மீறிய அதிகாரங்கள் பலவீனமான ஆட்சி அதிகாரத்தை உருவாக்கும் என்று குறிப்பிடப்படுவது இன்று உண்மையாகியுள்ளது. இந்த அரசுக்கு நாட்டு மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பல எதிர்பார்ப்புக்கு மத்தியில் வழங்கினார்கள்.

பலமான தலைமைத்துவத்தின் கீழ் நாடு நல்லதை நோக்கிப் பயணிக்கும் எனக் கருதியே மக்கள் பெரும்பான்மைப் பலத்தை வழங்கினார்கள். ஆனால், இன்று மக்களின் எதிர்பார்ப்பு தகர்த்தப்பட்டு மக்கள் பெரும் சிரமங்களுக் குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதிகாரம் கூடிய பின்னர் தான்தோன்றித்தனம் ஏற்படும் என்பதைத் தற்போது உணர்ந்துகொள்கின்றோம் - என்றார்.

## வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கொரோனாவால் நேற்று காலை மரணம்



(இ.கலையமுதன்)
கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா (வயது 76) சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவருக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளது என அறிக்கையிடப்பட்டது.

அதையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

## குடும்பப் பகை காரணமாக காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்பு; காதலன் உயிர்மாய்ப்பு; காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

நீண்டகால குடும்பப் பகை காரணமாக காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தமையால், காதலர்கள் தவறான முடிவெடுத்து உயிரைமாய்க்க முனைந்த நிலையில் காதலன் உயிரி ழந்துள்ளார். காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உறவு முறையான 19 வயது இளைஞரும், 17 வயது சிறுமியும் காதலித்து வந்துள்ளனர். இரு வீட்டாருக்கும் இடையில் நீண்ட காலமாகக் குடும்பப் பகை நிலவி வந்துள்ளது.

இந்நிலையில், தமது பிள்ளைகள் காதலிப்பதை அறிந்த பெற்றோர் காதலுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் காதலர்கள் இருவரும் தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்க முனைந்துள்ளனர்.

அந்நிலையில், இருவரையும் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தவேளை, அங்கு காதலன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## 131 கிலோ கேரள கஞ்சா கடத்தல் முறியடிப்பு; இருவர் சிக்கினார்கள்

**(ந.லோகதயாளன்)**

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்த முற்பட்ட 131 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து மன்னாருக்குக் கடத்திவரப்பட்ட கேரள கஞ்சாவைக் கூலர் வாகனத்தில் நூதனமாக மறைத்து வைத்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த வாகனம் மடக்கப்பட்டது.

இதன்போது மீன் எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் ரெஜிபோம் பெட்டிகளில் மறைத்துக் கடத்த முற்பட்ட 131 கிலோகிராம் கேரள கஞ்சாவையும் அதனைக் கடத்த உடந்தையாக இருந்த இருவரையும் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.



## வடக்கு பிரதம செயலருக்கு கொரோனா வைரஸ் உறுதி

### மேலும் இரு மூத்த அதிகாரிகளுக்குத் தொற்று

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாண சபையின் புதிய பிரதம செயலாளர் சமன்பந்துல சேனவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவரின் துணைவியாருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் பிரதம செயலாளருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே பிரதம செயலாளருக்குக் கொரோனா உறுதிசெய்யப்பட்ட அதே நேரம் வடக்கு மாகாண சபையின் மேலும் சில மூத்த அதிகாரிகளுக்கும் தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்கள ஆணையாளரும் வடக்கு மாகாண பதில் காணி ஆணையாளருமான சோதிநாதன் மற்றும் முகாமைத்துவபணிப்பாளர் ஆயகுலன் ஆகியோருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் வடக்கு மாகாணத் திணைக்களங்களில் பணியாற்றுபவர்களை கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்தும்நிலைஏற்பட்டுள்ளது.

## மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டது பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி

### பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக் கொரோனா

**(இ.கலையமுதன்)**

பருத்தித்துறை, ஒகஸ்ட் 12

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைகிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அந்தக் கிளையில் பணியாற்றும் அனைவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதனால் வங்கியின் பருத்தித்துறை கிளையை மறு அறிவித்தல் வரை மூடுமாறு சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவருக்குக் கொரோனாத் தொற் றுள்ளமை கண்டறியப்பட்டது என இன்று முற்பகல் அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளையில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்த வைத்திய சுகாதார மருத்துவ அதிகாரியால் அறிவுறுத்தப்பட்டது.

## வரணியில் 17 பேருக்கு கொரோனா

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடத்தப்பட்ட எழுமாற்று அன்டிஜன் பரிசோதனையில் 25 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரிசுகாதாரவைத்தியஅதிகாரி பணிமனைக்குட்பட்ட வரணியில் சமுர்த்தி வங்கி ஊழியர் ஒருவர், பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் உட்பட்ட 17 பேருக்கு வரணிப் பகுதியில் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.

மேலும், சாவகச்சேரிப் பகுதியில் எண்மருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டிச்சாலையின் ஊழியரும் ஒருவர்.

குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு நகரின் பெருமளவான வர்த்தகர்களும் மக்களும் செல்பவர்கள் என்பதால், அங்கு சென்று வருபவர்களை அவதானமாகச் செயற்படுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். அத்துடன் சிற்றுண்டிச் சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir




# கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத 5 ஆயிரத்து 22 பேர் இதுவரை மரணம்

கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத ஐயாயிரத்து இருபத்து இரண்டு பேர் இதுவரையில் இலங்கையில் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் கொவிட் பெருந்தொற்று காரணமாக இதுவரையில் 5,222 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 5,022 பேர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் என சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், 200 பேர் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இதில் 177 பேர் தடுப்பூசியின் ஒரு டோஸ் மட்டும் பெற்றுக் கொண்டிருந்த நிலையில் கொவிட் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமையுடன், 23 பேர் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட நிலையில் உயிரிழந்தவர்களுக்கு வேறும் நோய்கள் காணப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போராட்டத்தை வலுப்படுத்த ஒன்றிணைக வவுனியா ஆசிரியர்களுக்குக் கோரிக்கை

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்சங்கப் போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வவுனியா மாவட்டத்திலும் அதிபர், ஆசிரியர்களை ஒன்றிணைந்து செயற்படுமாறு ஆசிரியர், அதிபர் ஒன்றிணைந்த சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் ஆசிரியர், அதிபர் ஒன்றிணைந்த சங்கங்களின் சம்மேளனத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம், ஏகாபத்த குருசேவா சங்கம், அதிபர் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். இதன் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். நாடாளவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் குறித்த தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வவுனியா மாவட்ட அதிபர், ஆசிரியர்களும் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட இரு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளோம். அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும். இந்தப் போராட்டம் தற்போது சர்வதேசத்தினது கவனத்தைப் பெற்றுள்ளது.

எனவே எங்களது நியாயமான கோரிக்கைக்கு அரசாங்கம் பதில் தர வேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும் எனத் தெரிவித்துள்ளனர்.

# விநாயகர் கடற்தொழிற்சங்க உறுப்பினர்கள் ஏழு பேருக்கு அட்டைப் பண்ணைக்கு அனுமதி

## கௌதாரிமுனையில் வழங்கினார் அமைச்சர் டக்ளஸ்



கௌதாரி முனை விநாயகர் கடற்தொழிற்சங்க உறுப்பினர்கள் ஏழு பேருக்கு அட்டைப் பண்ணைக்கான அனுமதிகள் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க் கிழமை) வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பூநகரி பகுதியில் அமைந்துள்ள இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாணத்துக்கான பிராந்திய அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

52 பேர் குறித்த அனுமதியை கோரியிருந்த நிலையில், 7 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன் எதிர்வரும் திங்கட்கிழமை அட்டைப் பண்ணைக்கான பணி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அனுமதி கோரிய 52 பேருமே அட்டைப்பண்ணைக்குரிய பணிகளை ஆரம்பிக்க முடியும் என்றும் அனுமதி வழங்கப்படாதவர்களுக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அனுமதி இல்லை என்பதற்காக அட்டைப் பண்ணையினை ஆரம்பிக்காமல் இருக்க வேண்டாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கண்ணீர் அஞ்சலி



எமது காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்
திரு.என்.வித்தியாதரன் அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி கண்மணி நவரத்தினம்

அவர்கள் நேற்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, காலைக்கதிர் குடும்பமும் துயரில் பங்குகொள்கின்றது.

அன்னாரின் ஆத்மா மீண்டும் பிறப்பற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

நிர்வாக இயக்குநர், ஊழியர்கள்
காலைக்கதிர் பத்திரிகை.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கோணலிங்கம் கருணானந்தராசா

(நகர பிதா, வல்வெட்டித்துறை நகர சபை)



சமூக சேவையாளரும் இடது சாரி சிந்தனையாளருமான வல்வெட்டித் துறை நகர சபையின் நகர பிதா கோணலிங்கம் கருணானந்தராசாவின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அவரது குடும்பத்தாரின் கவலையில் நாம் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், உப தவிசாளர்,
உறுப்பினர்கள்
பருத்தித்துறை பிரதேச சபை.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணீர் அஞ்சலி



எமது காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்
திரு.என்.வித்தியாதரன் அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி கண்மணி நவரத்தினம்

அவர்கள் நேற்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, காலைக்கதிர் குடும்பமும் துயரில் பங்குகொள்கின்றது.

அன்னாரின் ஆத்மா மீண்டும் பிறப்பற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் நிர்வாக இயக்குநர், ஊழியர்கள் காலைக்கதிர் பத்திரிகை.